Food and Agriculture
Organization of the
United Nations

# கடலில் சிறுதர மீனவர்களுக்கான பாதுகாப்பு



BOBP

# கடலில் சிறுதர
# மீனவர்களுக்கான பாதுகாப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு
ரோம் 2019

Required citation:
FAO. 2019. *Safety at sea for small-scale fishers*. Rome.

The designations employed and the presentation of material in this information product do not imply the expression of any opinion whatsoever on the part of the Food and Agriculture Organization of the United Nations (FAO) concerning the legal or development status of any country, territory, city or area or of its authorities, or concerning the delimitation of its frontiers or boundaries. The mention of specific companies or products of manufacturers, whether or not these have been patented, does not imply that these have been endorsed or recommended by FAO in preference to others of a similar nature that are not mentioned.

The views expressed in this information product are those of the author(s) and do not necessarily reflect the views or policies of FAO.

ISBN 978-92-5-131753-2
© **FAO**, 2019

Some rights reserved. This work is made available under the Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 IGO licence (CC BY-NC-SA 3.0 IGO; https://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/igo/legalcode).

Under the terms of this licence, this work may be copied, redistributed and adapted for non-commercial purposes, provided that the work is appropriately cited. In any use of this work, there should be no suggestion that FAO endorses any specific organization, products or services. The use of the FAO logo is not permitted. If the work is adapted, then it must be licensed under the same or equivalent Creative Commons licence. If a translation of this work is created, it must include the following disclaimer along with the required citation: "This translation was not created by the Food and Agriculture Organization of the United Nations (FAO). FAO is not responsible for the content or accuracy of this translation. The original [Language] edition shall be the authoritative edition."

Disputes arising under the licence that cannot be settled amicably will be resolved by mediation and arbitration as described in Article 8 of the licence except as otherwise provided herein. The applicable mediation rules will be the mediation rules of the World Intellectual Property Organization http://www.wipo.int/amc/en/mediation/rules and any arbitration will be conducted in accordance with the Arbitration Rules of the United Nations Commission on International Trade Law (UNCITRAL).

**Third-party materials**. Users wishing to reuse material from this work that is attributed to a third party, such as tables, figures or images, are responsible for determining whether permission is needed for that reuse and for obtaining permission from the copyright holder. The risk of claims resulting from infringement of any third-party-owned component in the work rests solely with the user.

**Sales, rights and licensing**. FAO information products are available on the FAO website (www.fao.org/publications) and can be purchased through publications-sales@fao.org. Requests for commercial use should be submitted via: www.fao.org/contact-us/licence-request. Queries regarding rights and licensing should be submitted to: copyright@fao.org.

Illustrations and Layout: S Jayaraj and Yugraj Singh Yadava (BOBP-IGO)
Tamil Translatation: P Umakandan

## பொருளடக்கம்


**அத்தியாயம் 1 பொது பாதுகாப்பு** ..... 1
- பொது பாதுகாப்பு ..... 3
- தள பாதுகாப்பு ..... 4
- பாதுகாப்பு கைபிடிகளும் ஏணிகளும் ..... 14
- நெருப்பிலிருந்து பாதுகாப்பு ..... 18
- காற்றோட்டம் ..... 23
- ஒளியூட்டுதல் ..... 24
- கயிற்றையும், கம்பியையும் கையாளுதல் ..... 25
- பன்னாட்டு கடல்சார் சமிக்ஞைக் கொடிகள் ..... 30

**அத்தியாயம் 2 சுய பாதுகாப்பு** ..... 31
- சுய பாதுகாப்பு ..... 33
- பணிக் குழுவினரின் பாதுகாப்பும் உடல்நலமும் ..... 58
- கடலினுள் வீழ்வதை தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கைகள் ..... 59
- உயிர்காப்பு சாதனங்கள் ..... 60
- குளியோடி மீன்பிடித்தலுக்கான பாதுகாப்பு முறைமைகள் ..... 62

**அத்தியாயம் 3 நிலைத்தன்மை** ..... 65
- நிலைத்தன்மை ..... 67
- கலன் நிலைத்தன்மையை பராமரித்தல் ..... 70

**அத்தியாயம் 4 கடலில் உயிர் பிழைத்திருத்தல்** ..... 71
- இயந்திர செயலிழப்பின் போது எவ்வாறு செயல்படவேண்டும் ..... 73
- உயிர்காப்பு மிதவைகளும், உயிர்காப்பு ஆடைகளும் ..... 81
- மாற்று உயிர்காப்பு மிதவைகள் ..... 84
- குளிரால் ஏற்படக்கூடிய தீங்குகள் (உயிர் பிழைத்திருப்பதற்கான நுட்பங்கள்) ..... 85
- வெப்பக்குறைவு (Hypothermia) ..... 86
- குளிரால் பாதங்கள் விரைப்படைதல் ..... 87
- சூரிய ஒளியால் தோல் கருகுதல் ..... 88
- கண்களின் பாதுகாப்பு ..... 88
- உப்பு நீரினால் உடல் எரிந்து போதலும், இரணமாதலும் ..... 88
- உடலியக்கங்கள் ..... 88
- உடலில் நீரிழப்பு ஏற்படுதல் ..... 89
- சித்தப்பிரமையும் மனக்குழப்பமும் ..... 89
- சுகாதாரம் ..... 89

**அத்தியாயம் 5 முடிவுரைகள்** ..... 91
- செய்யக்கூடியவைகளும் செய்யக்கூடாதவைகளும் ..... 92
- மனதில் நிறுத்தவேண்டிய முக்கிய குறிப்புக்கள் ..... 95
- முடிவுரைகள் ..... 97

# முன்னுரை

ஒரு மீன்பிடி கலனில் வேலை செய்யும் ஒவ்வொருவரும் “முதலில் பாதுகாப்பு” என்பதை மனதில் இறுத்திக்கொள்ளவேண்டும். பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் உயிர்களை பாதுகாக்கும், கலன்களை சேதத்திலிருந்து பாதுகாக்கும், கடுமையான விபத்துக்களையும், அதனால் ஏற்படக்கூடிய காயங்களையும் தவிர்ப்பதுடன், சுற்றுச்சூழலை பாதுகாத்து இலாபகரமான மீன்பிடிப்பிற்கு பங்களிக்கின்றன.

அனைத்து வகையான மீன்பிடி கலன்களின் உரிமையாளர்களும், அவற்றை இயக்குபவர்களும் மற்றும் கல நாயகர்களும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக தங்கள் குழுவுக்கு பயிற்சியளிக்க கடமைப்பட்டுள்ளனர். இந்த கையேடு மீன்பிடி கலன்களில் ஏற்படக்கூடிய விபத்துக்களின் எடுத்துக்காட்டுகளையும், மேலும் இத்தகைய விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்க பயனுள்ள குறிப்புக்களையும் வழங்குகிறது.

இந்த கையேடு 12 மீட்டர் நீளத்துக்கு குறைவான, மீன்பிடி கலன்களை பயன்படுத்தும், சிறுதர மீனவர்களுக்காக பிரதானமாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றாலும், இந்த குறிப்புகளில் பெரும்பாலானவை 20 மீட்டர் நீளத்துக்கு உட்பட்ட பெரிய மீன்பிடி கலன்களுக்கும் பயனுள்ளதாக இருக்கின்றன.

இது ஒரு பாதுகாப்பு விழிப்புணர்வு கலாசாரத்தை ஊக்குவிக்கும் வகையில், எளிமையான முறையில், படங்களுடன் எழுதப்பட்டுள்ளது.

சிறுதர மீன்பிடி கலன்களின் பாதுகாப்பு பற்றி மேலும் விரிவான தகவலுக்கு தயவுசெய்து கீழ்க்கண்ட வலை தளங்களை பார்க்கவும்:

1) உவேஅ/பதொஅ/பகஅ. 12 மீட்டர் நீளத்துக்கு குறைவான தளம் அமைக்கப்பட்ட மற்றும் தளம் அமைக்கப்படாத மீன்பிடி கலன்களுக்கான பாதுகாப்பு பரிந்துரைகளை *http://www.fao.org/3/i3108e/i3108e.pdf* ல் பார்க்கவும்.

2) மீன்வள நடவடிக்கைகள். மீன்வளத்துறையில் கடலில் பாதுகாப்பை மேம்படுத்த சிறந்த நடைமுறைகள். எண். 1, பிற்சேர் 3. ரோம், *http://www.fao.org/3/a-i4740e.pdf* ல் கிடைக்கும்.

3) உவேஅ/ஸ்வீடன் பன்னாட்டு மேம்பாட்டு கழகம்/வங்காள விரிகுடா திட்டம் – அரசிடை அமைப்பு.
சிறிய மீன்பிடி படகுகளுக்கான பாதுகாப்பு வழிகாட்டி கையேடு *http://bobpigo.org/webroot/img/uploaded/pdf/safety_guide-rep112.pdf* ல் கிடைக்கும்.

## ஒப்புகைகள்

“சிறுதர மீனவர்களுக்கான கடலில் பாதுகாப்பு” பற்றிய இந்த கையேடு, உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (உவேஅ) மூலம் வங்காள விரிகுடா திட்ட–அரசிடை அமைப்பின் (வவிகுதி–அஇஅ) நெருக்கமான ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்டது.

இந்த ஆவணம் 2007 ல் சுனாமி மறுவாழ்வு திட்டத்தின் ஒரு பகுதியாக, தயாரிக்கப்பட்ட ஒரு கையேட்டின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பாகும், இது இத்தாலி அரசாங்கத்தின் நிதி உதவியுடன் தயாரிக்கப்பட்டது. இந்த புதுப்பிக்கப்பட்ட ஆவணம் திரு எஸ்.கே. எஸ். செயசிங்கே, திரு. லலித் சேனநாயகா, திரு. அரி குட்முண்ட்சன், ஸ்டெப்பானோ தெர்ம்ஸ் ஆகியர்களால் உருவாக்கப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட இந்த பதிப்பு திரு. ரேமான் வான் அன்ரூய், திருமதி ஐரிஸ் மொன்னேரூ மற்றும் திருமதி நிக்கோல் பிரான்ஸ் ஆகியவர்களிடம் இருந்து தொழில்நுட்ப வழிகாட்டுதலை பெற்று திரு எஸ் ஜெயராஜ், திரு யுக்ராஜ் சிங் யாதவா ஆகியவர்களால் தயாரிக்கப்பட்டது.

இந்த கையேடு உணவு பாதுகாப்பும், வறுமை ஒழிப்பும் என்று ஒரு சூழலில் வளங்குன்றா சிறுதர மீன்வளத்தை பாதுகாப்பதற்காக (சிறுதர மீன்பிடிப்பு வழிகாட்டு முறைகள்) “தன்னார்வ வழிகாட்டு முறைகளின்” செயலாக்கத்திற்கு ஆதரவாக தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆவணத்தின் உற்பத்தி SSF வழிகாட்டுமுறைகளின் மேம்பாட்டிற்காகவும், பயன்பாட்டிற்காகவும், உவேஅ குடை திட்டத்துக்கு நார்வே அரசாங்கத்தின் ஒரு பங்களிப்புடனும், உலகளாவிய சுற்றுச்சூழல் வசதி நிறுவனத்தின் (GEF) கிழக்கத்திய கரீபியன் காலநிலை மாற்றத்துக்கேற்ப மீன்வளத்துறையை மாற்றியமைக்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியுடன் தயாரிக்கப்பட்டது.

# பொது பாதுகாப்பு



# பொது பாதுகாப்பு

ஒரு கடற்தொழில் கலனில் உள்ள இடவசதியானது மிகவும் குறைவானதாகும். மீன்பிடி நடவடிக்கைகளுக்கு தேவையான பல கருவிகள், உபகரணங்கள், வலைகள் முதலியன கலனில் பாதுகாப்பாக சேமிக்கப்படுகின்றன. கடற்றொழில் பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றத் தேவையான பனிக்கட்டிகள், மீன் இரைகள், நன்னீர், எரிபொருள் மற்றும் உணவு பொருட்கள் போன்றவை கலனில் பாதுகாக்கப்படுகின்றன. சில நேரங்களில் சமைக்கவும், பணிக்குழுவினர் தங்கவும் போதுமான இடவசதி இல்லை. வேலை செய்யவும், தங்கி இருக்கவும் போதுமான இடவசதியைக் கொண்டிருப்பது குழு உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு முக்கியமானதாகும். கலன் பராமரிப்பு என்பது பாதுகாப்பின் ஒரு முக்கிய அம்சமாகும். சுக்கான் மற்றும் எரிபொருள் அமைப்புக்கள், கலன் வழிச்செலுத்தும் உபகரணங்கள், படகு கூடு மற்றும் இயந்திரச் செயல்பாடுகள் அதே போல் பாதுகாப்பு சாதனங்களை தொடர் சோதனைகள் செய்தல் பாதுகாப்புக்கு அவசியமாகும்.

முக்கியமாக தெரிந்திருக்கவேண்டியது: கடற்றொழில் கலன்களில் ஏற்படும் விபத்துக்களின் முக்கிய காரணங்கள் பின்வறுமாறு:

1. கலனில் தீ
2. கலனில் இருந்து மனிதன் கடலினுள் வீழ்தல்
3. தனிப்பட்ட விபத்துக்கள் குழுவினருக்கு தீங்கு விளைவித்தல்
4. படகு கூட்டில் நீர்க்கசிவு
5. தளர்வான நிலை மற்றும் தனித்து விடப்படுதல்
6. மீன்பிடி வலையிழப்பு
7. இயந்திரத்தின் செயலிழப்பு
8. சுக்கான் அமைப்பின் செயலிழப்பு
9. இறக்கை/சுழலி இழப்பு
10. பற்சக்கர பெட்டி (கியர் பாக்ஸ்) சீர்குலைவு
11. எரிபொருள் குறைவு
12. ஒரு சூறாவளியை எதிர்கொள்ளுதல்
13. குடிதண்ணீரும் மற்ற உணவு பொருட்களும் குறைதல்
14. மற்றொரு கலனுடன் மோதல்
15. தகவல்தொடர்பு இழப்பு
16. கடற்கொள்ளையர்களிடம் பிடிபடுதல்
17. தரை தட்டுதல்
18. வெடித்தல்கள்
19. வலிமையான காற்றையும் நீரோட்டத்தையும் எதிர்கொள்ளுதல்
20. மின்னல்வெட்டு

# தள பாதுகாப்பு


திறந்திருக்கும் வாயில் மூடிகள், கதவுகள் சரிந்து விடாமல் அல்லது நகர்ந்துபோய் விடாமல் இருக்க பாதுகாப்பாக கட்டி வைக்கப்படவேண்டும்.
பயன்படுத்தப்படாத போது தண்ணீர் குழாய்கள் சுற்றப்பட்டு உரிய தாங்கிகளில் வைக்கப்படவேண்டும்.


கருவிகளும், உபகரணங்களும் அவற்றுக்கு உரிய இடங்களில் பாதுகாப்பான முறையில் வைக்கப்படவேண்டும்.
எப்போதும் நடமாடும் வழிகளில் பொருட்களும், தளவாடங்களும் இல்லாமல் வைத்துக்கொள்ளவும்.



சிக்கிக்கொண்ட
வலைகளையோ அல்லது
கயிறுகளையோ வெட்டி
விடும் வகையில்
எப்போதும் ஒரு இரும்பு
வெட்டியையும், ஒரு
கத்தியையும் தயாராக
வைத்திருக்கவும்.
இது வலைகள்
அல்லது கயிற்றில்
அல்லது தூண்டிலில்
சிக்கிக்கொண்ட நபரை
விடுவிக்க உதவும்.




எளிதில் தீப்பற்றி எரியக்கூடிய
பெட்ரோலையோ அல்லது பிற
திரவங்களையோ துப்பரவு செய்ய
பயன்படுத்தக் கூடாது.



வேலை செய்யும் இடங்கள், தளங்கள், இயந்திர அறை, சுக்கான் அறை மற்றும் நங்கூரம் வைக்கும் பகுதிகளில் ஒரு நபர் வழுக்கி விழவோ அல்லது சரிந்து விழவோ காரணமாக இருக்கும் பொருட்கள் இல்லாமல் வைத்திருக்கவேண்டும்.





மீன்களை கையாளுவதற்கான வழுவழுப்பான மேற்தளம் தவிர மற்ற தள பகுதிகள் அனைத்தும் வழுக்காத தளங்களாக இருக்கவேண்டும்.



தளத்தில் வைக்கப்பட்டுள்ள தளவாட
பொருட்கள் மோசமான வானிலையில்
ஆடி அசைவதை தவிர்க்கும் வகையில்,
அவற்றை எப்போதும் கலனுடன் சேர்த்துக்
கட்டி வைக்கவேண்டும்.





எல்லா வார் பட்டிகளுக்கும் அதே போல்
உபகரணங்களின் நகரும் பகுதிகளுக்கும்
முறையான பாதுகாப்பு கவசங்கள்
பொருத்தப்படவேண்டும்.


வேலை செய்யும் இடங்கள், தங்குமிடங்கள் மற்றும் கலன் குழுவினர் சுறுசுறுப்பாக இயங்கும் பகுதிகளில் எந்த கூர் முனைகளும் இருக்கக்கூடாது.


இயந்திரம் இயங்காத போது கலனை வழிச்செலுத்த வசதியாக ஒரு பாயையும், கொடிக்கம்பத்தையும் மற்றும் துடுப்புகளையும் கலனில் எப்போதும் எடுத்துக் கொண்டு செல்லவேண்டும்.


துறைமுகத்தில் கலனைக் கட்டும்போது, கலன் பாதுகாப்பான நிலையை அடையும் வரை கலனில் இருந்து வெளியேறக்கூடாது. முன்னரே வெளியேற முயற்சித்தால் படகு கட்டும் துறைக்கும் கலனுக்கும் இடையில் சறுக்கி விழும் வாய்ப்பு அதிகம்.


உள்ளே யாராவது இருக்கிறீர்களா ?
எப்போதும் வாயில்கள், தடுப்பறைகள் அல்லது தொட்டிகளை மூடும் முன், அவற்றினுள் எவரும் தங்கிவிடவில்லை என்பதை உறுதிசெய்து கொள்ளவும்.


மீன்களின் வழுவழுப்பான கோழையை அகற்றுவதற்கு தளங்களையும் பிற பகுதிகளையும் அடிக்கடி கழுவி விடவேண்டும். இது சறுக்கல்கள், வழுக்கல்கள் மற்றும் வீழ்தல்களை குறைக்க உதவும்.


கருவிகளையும், தளவாடங்களையும் முறைப்படுத்தி பாதுகாப்பாக வைக்கவும்.



கால்களுக்கு ஒரு நல்ல பிடிப்பைக் கொடுக்க தளத்தில் தேவைப்படும் இடங்களில் ரப்பர் விரிப்புக்களை பயன்படுத்தலாம்.

கலன் சென்று கொண்டிருக்கும்போது, கடலில் இருந்து நீரை வாளியால் அள்ள முயற்சிக்காதீர்கள். இது கலனில் இருந்து கடலினுள் விழுந்து விடக்கூடிய ஆபத்தை விளைவிக்கலாம்.





போலியான இரை பொருத்தப்பட்ட கயிற்றை இழுக்கும்போது தங்களது கைகளை பாதுகாக்க கையுரைகளை அணியவேண்டும்.

படகில் தனித்து செல்லும்போது, தளத்துக்கு செல்லவேண்டுமானால், என்ஜினை கியரிலிருந்து விடுவித்துவிட்டு செல்லவேண்டும். நீங்கள் தவறி கடலில் விழுந்து விட்டாலும்கூட, உங்களை விட்டு கலன் வெகு தூரம் செல்லாமல் இருக்க இது உதவும்.



# கைபிடி கம்பிகளும் ஏணிகளும்




பயன்படுத்தப்படாத தள திறப்புக்கள் மற்றும் நுழை வாயில்கள் மூலம் கடல் நீர் கலனுக்குள் செல்லாமல் தடுக்கவும், குழு உறுப்பினர்கள் எதிர்பாராதவிதமாக அவற்றினுள் விழுவதைத் தவிர்க்கவும் அவற்றை மூடிப் பாதுகாப்பாக வைக்கவேண்டும். திறப்புகளின் மூடிகள் சரியாக மூடி வைக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.





பயன்படுத்தப்படாதபோது ஏணிகள் மற்றும் இறங்கு நடை பாதைகளை கட்டி வைக்கவும் அல்லது பத்திரப்படுத்தவும்.





எப்போதும் ஏணிகளை பயன்படுத்தும் முன், அவை நன்றாக பராமரிக்கப்பட்டுள்ளனவா என்பதை  சோதித்து உறுதி செய்ய வேண்டும்.



மடித்து எடுத்துச் செல்லக்கூடிய ஏணிகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும். அவ்வாறு பயன்படுத்தினால், அது பாதுகாப்பாக கட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்து கொள்ளவும்.



ஏணிகளில் ஏறும்போது வழுக்காதவாறு அவற்றை சுத்தமாக வைத்திருக்கவும்.

குழு உறுப்பினர் ஒருவர் தண்ணீரில் வேலை செய்துகொண்டு இருக்கும்போது, ஒரு ஏணி அல்லது ஒரு கயிற்று ஏணியைத் தளத்தில் தயாராக வைத்திருக்கவும்.





அந்தரத்தில் தொங்கியபடி வேலை செய்யும்போது, ஒரு போசனின் நாற்காலியைப் பயன்படுத்தவும்.



## நெருப்பிலிருந்து பாதுகாப்பு

கடலில் நெருப்பு மிகவும் அபாயகரமானது, உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடியது. எப்போதும் உங்கள் கலனை நெருப்பின் ஆபத்துக்கள் இல்லாமல் வைத்திருக்கவும். எரிபொருள், வெப்பம், காற்று ஆகியவை நெருப்பின் மூலக்கூறுகளாகும், நெருப்பு ஆபத்துக்களை குறைக்க அவற்றை தனித்தனியே வைத்திருக்கவும்.









மின்னமைப்பு ஒழுங்காக இருக்கிறதா என்பதை உறுதிசெய்யவும். ஏதாவது தளர்வான மின்னிணைப்பு, சேதமாகி வெளியில் தெரியும் மின் ஒயர்கள், அதிக எண்ணிக்கையில் மின்முனைகள் செருகப்பட்ட மின் பகிர்வு பெட்டிகள் மற்றும் தவறான சொடுக்கிகள் முதலியவற்றை உடனடியாக மாற்றவும்.

அரித்து, இற்றுப்போன எரிவாயு ரெகுலேட்டர்களை மாற்றவும். எரிவாயு குழாய்களை காலாவதியாகும் தேதிக்கு முன்னரோ அல்லது ஆண்டுதோறுமோ, குறிப்பாக அவை சூரிய ஒளி மற்றும் வானிலை நிலைமைகளால் பாதிக்கப்படும் இடங்களில் இருந்தால் மாற்றவும்.



பயன்படுத்தாதபோது எல்லா அடுப்புகளையும் அணைத்துவிடவும், எரிவாயு கொள்கலனுடன் இணைந்த ரெகுலேட்டர் இணைப்பைத் துண்டிக்கவும். அங்கீகரிக்கப்பட்ட எரிவாயு குழாய்களையும் ரெகுலேட்டர்களையும் மட்டும் பயன்படுத்தவும். சமையலுக்கு பயன்படுத்தப்படும் புறப்பேன், பூற்றேன் போன்ற எரிவாயுக்கள் பெட்ரோலை விட மேலும் ஆபத்தானவை. இந்த எரிவாயுகள் காற்றை விட கனமானவை, அவை வெளியேறினால், அவை கலனின் கீழ்பகுதியில் உள்ள அறைகளில் தங்கிவிடும், அவற்றை அகற்றுவது மிகவும் கடினமாகும். திறந்த தளத்தில் அனைத்து குடுவைகளும் முறையாக பாதுகாக்கப்படுகின்றனவா என்பதை உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.

சரியான பாதுகாப்பு அணிகலன்களை சமையலறையில் பயன்படுத்தவும். பாத்திரங்களை அவற்றிற்குரிய தட்டுகளிலும், அலமாரிகளிலும் வைக்கவும். அடுப்பைச் சுற்றி பாதுகாப்பு சட்டங்களை அமைக்கவும்.

ஒரு சூடான அடுப்பை கவனிக்காமல் செல்லாதீர்கள். உராய்வு நீக்கிகளும் (Grease), எண்ணெய்களும் எளிதில் தீப்பற்றக்கூடியவை, ஒரு பெரிய தீயை ஏற்படுத்தலாம்.





தீப்பற்றக்கூடிய
பொருட்களை
பணிக் குழுவினர்
தங்குமிடத்தில் இருந்து
விலக்கித் தூரமாக
வைக்கவேண்டும்.
அவற்றைச் சரியான
கொள்கலன்களில்
பாதுகாப்பாக
வைக்கவும்.




எண்ணெய் படிந்த கந்தல்
துணிகளை எப்போதும்
தீப்பற்றாத கொள்கலனில்
போடவும். இவை தீ பற்றாதவை
போல் இருந்தாலும், பிற
வெப்ப மூலக்கூறு இல்லாமல்,
தன்னிச்சையாக பற்றிக்
கொள்ளக்கூடும்.




எல்லா இடங்களிலும் புகைக்காமல், புகைப்பதற்கென்று ஒரு பொதுவான இடத்தை ஒதுக்கவும். புகைப்பதற்காக ஒதுக்கிய இடத்தில், தீயை அணைப்பதற்கு ஏதுவாக ஒரு தீயணைப்பானையும், ஒரு வாளி மணலையும் வைத்திருக்கவும். ஒருபோதும் படுக்கை அறையில் புகைக்கக்கூடாது.



தீயணைப்பான்கள் எளிதாக எடுக்கக்கூடிய இடத்தில் வைக்கப்படவேண்டும். கலனில் தீயணைப்பான்கள் இருக்கும் இடமும், அவற்றை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்ற விவரமும் படகில் உள்ள அனைவரும் நன்கு அறிந்திருக்கவேண்டும். தீயணைப்பான்களை அவ்வப்போது ஆய்வுக்கு உட்படுத்தவேண்டும். அவை காலாவதியாகும் தேதிக்கு முன் மீண்டும் நிரப்பப்படவேண்டும்.

இயந்திரங்களின் புகைபோக்கி குழாய்களை (அதே போல் அடுப்புகள்) சுற்றி ஒரு திடமான அல்லது துளையிடப்பட்ட உலோக தகடை கொண்டு மூடி வைக்கவும்.



துவைத்த துணிகள், கையுரைகள், தொப்பிகள் அல்லது பிற இனங்களை உலர்த்துவதற்கு அடுப்புக்கு மேலே தொங்க விடாதீர்கள் – அவை அடுப்பில் விழுந்து தீப்பற்றிக்கொள்ளலாம்.



# காற்றோட்டம்

மின்கலங்கள் எளிதில் அணுகக்கூடிய, நல்ல காற்றோட்டமான இடத்தில் பாதுகாப்பாக வைக்கப்படவேண்டும். மின்கலங்களைத் தண்ணீர் படாத இடங்களில் வைக்கவேண்டும். பணிக்குழவினர் தங்கும் அறைகளில் ஒருபோதும் மின்கலங்களை வைக்கக்கூடாது. மின்கலங்களில் இருந்து வெளியேறும் புகையையும், வாயுக்களையும் குழு உறுப்பினர்கள் சுவாசிப்பதால் பாதகமான விளைவு ஏற்படும்.




குழு உறுப்பினர்களுக்கு போதுமான நல்ல காற்று கிடைக்கும் வகையில், தூங்கும் அறைகளை வடிவமைத்து, நிர்மாணிக்கவேண்டும். இயந்திர அறையில் இருந்து புகைபோக்கியால் வெளியேற்றப்படும் வாயுக்கள் அங்கேயே சேர அனுமதிப்பது ஆபத்தானது.



# ஒளியூட்டுதல்



மீன்பிடித்தலின்போது, மீன்பிடி நடவடிக்கைக்கு இருள் தேவைப்பட்டால் ஒழிய தளங்களில் எரியும் ஒளி தரும் விளக்குகளை அணைக்கக்கூடாது. கண்களை கூசச் செய்யும் விதமாகவோ அல்லது பரிந்துரைக்கப்பட்ட கலன் வழிசெலுத்தும் விளக்குகளின் திறனுடன் குறுக்கிடும் விதமாகவோ ஒளி தரும் விளக்குகளை பொருத்தக்கூடாது.




இரவில் மற்றும் நகராமல் நங்கூரமிட்டுக் கிடந்தால்கூட எப்போதும் கலனின் இடதுபுறம் சிவப்பு விளக்கையும், வலதுபுறம் பச்சை விளக்கையும் மற்றும் கொடிமரத்தின் உச்சியில் ஒரு வெள்ளை விளக்கையும் எரிய விட வேண்டும்.



எல்லா வேலைத் தளங்களிலும் பாதுகாப்பாக வேலை செய்வதற்குப் போதுமான வெளிச்சம் இருக்கவேண்டும். படி கட்டுகளிலும், துணை பாதைகளிலும் மற்றும் ஏணிகளுக்கு அருகிலும் போதிய விளக்குகள் இருப்பதை உறுதிசெய்யவும்.

# கயிற்றையும் கம்பியையும் கையாளுதல்

வலஞ் சுழியாக சுற்றப்பட்டுள்ள கயிற்று சுருளை எடுக்கும்போது சுருளின் உட்பகுதியில் இருந்து இடஞ் சுழியாக கயிற்றை எடுக்கவேண்டும்.

கயிறுகளின் சுற்று மடிப்புகளை எப்போதும் சரியான சுழி வாக்கில் விடுவிக்கவேண்டும் – வலஞ் சுழியாக சுற்றப்பட்டுள்ள கயிற்றினை வலப்பக்கமாக விடுவிக்கவும்.





ஒரு வளைந்த/மடங்கிய கயிற்றை அல்லது ஒயரை முடிந்த வரை விரைவாக மாற்றவேண்டும்.

ஒரு முறுக்கவிழ்ந்த/முறுக்கிக்கொண்ட கயிற்றை அல்லது கம்பியை ஒரு கப்பி வழியாக இழுப்பது ஆபத்தானது.



மற்றொரு படகை கட்டி இழுத்து வரும்போது கயிற்றில் திடீர் உதறலோ அல்லது சுமையோ கொடுக்கக்கூடாது. இந்த செயல்பாடு கயிற்றின் சுமையை அதிகமாக்கி கயிற்றை வலுவிழக்கச் செய்யலாம்.







இரண்டு கயிறுகளை இணைக்கவேண்டிய தேவை ஏற்பட்டால், முடிச்சு போடுவதற்கு பதிலாக கயிறுகளின் இழைகளை பின்னி இணைக்கவும்.



கப்பிகள் அனைத்தும் போதுமான வலிமை கொண்டதாகவும், கயிற்றின் அளவுக்கு பொருத்தமானதாகவும் இருக்கவேண்டும். கப்பியில் கயிறு போடும் பகுதி, கயிற்றின் விட்டத்திற்கு பொருத்தமாகவும் இருக்கவேண்டும்.



கயிறு தாங்கக்கூடிய பாதுகாப்பான சுமையை அறிந்துகொண்டு, சுமையின் எல்லையைத் தாண்டாமல் இருக்கவும். பழுதடைந்த கயிறுகளை எடைகளைத் தூக்க ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது.



கலனின் பக்கவாட்டில் இருந்து வீசப்படும் ஒரு கயிறு அல்லது வலை இறக்கையின் சுழற்சிக்கு ஊறு விளைவிக்கும் என்பதால் அவற்றை கடலில் வீசக்கூடாது.

தேவையற்ற கயிறுகள், வலைகள் அல்லது பிற தளவாட பொருட்களை கடலில் வீசக்கூடாது. இப்படிப்பட்ட தளவாடங்கள் பிற கலன்களுக்கு ஆபத்தை விளைவிக்கலாம், மாயை (Ghost fishing) மீன்பிடிப்புக்கு வழிவகுப்பதோடு, நீரையும் மாசுபடுத்தலாம்.



பயன்படுத்தாத வேளைகளில் கயிறுகளைச் சுற்றிக்கட்டி பொருத்தமான இடத்தில் வைக்கவும். இம்முறையானது கயிறு குழுவினர் கால்களில் சிக்கி விழாமல் இருக்க உதவும்.




கயிற்றில் எண்ணெய், எரிபொருள், பெயிண்ட் அல்லது பிற வேதி பொருட்கள் தோய்ந்து விடாதபடி பார்த்துக் கொள்ளவும்.




ஒரு கயிற்றை ஒருபோதும் கூராக மடிக்கவோ அல்லது வளைக்கவோ செய்யாதீர்கள், இது இழைகளை பலவீனமடையச் செய்யும்.



# பன்னாட்டு கடல்சார் சமிக்ஞைக் கொடிகள்



நான் சிரமத்துடன் கலனைச் செலுத்துகிறேன். என்னை விட்டு தொலைவில் செல்லுங்கள்.



நான் என்னுடைய கடல் வழியின் போக்கை வலப்பக்கமாக மாற்றுகிறேன்.



நான் முடங்கிப்போய் விட்டேன் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.



எனக்கு ஒரு பைலட் தேவை அருகில் உள்ள மீன்பிடி கலங்களுக்கு நான் படகில் வலைகளை ஏற்றிக்கொண்டிருக்கிறேன்.



நான் என்னுடைய கடல் வழியின் போக்கை இடப்பக்கமாக மாற்றுகிறேன்.



என் படகு தீயினால் பாதிக்கப்பட்டுள்ளது, என் கலனில் ஆபத்தை ஏற்படுத்தும் சரக்குகள் ஏற்றப்பட்டுள்ளது. என்னை விட்டு தொலைவில் செல்லுங்கள்; (அல்லது) நான் ஆபத்தை ஏற்படுத்தும் சரக்கை கசிந்து கொண்டிருக்கிறேன்.



நான் உங்களுடன் தகவல்தொடர்பு கொள்ள விரும்புகிறேன்.



என்னுடைய கலன் நிறுத்தப்பட்டுவிட்டது மற்றும் நீர் ஓட்டத்தில் செல்கின்றது.



மனிதன் கடலில் வேலைசெய்கிறான் (படகுகளின் மேன் ஓவர் போர்டு கழிகளில் இணைத்திருக்கும்).



நான் இரண்டு படகுகள் சேர்ந்து இழுக்கும் ஒரு பெரிய வலையின் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளேன். எனக்கு இடையூறு இல்லாமல் செல்லுங்கள்.



எனக்கு உதவி தேவைப்படுகிறது.



எனக்கு மருத்துவ உதவி தேவைப்படுகிறது.



நான் என்னுடைய நங்கூரத்தை ஏற்றிக்கொண்டிருக்கிறேன்.



மீன்பிடி தளங்கள் அருகில் மீன்பிடி கலங்கள் மூலம் எனக்கு ஒரு டிங்கி (டக் போட்) தேவைபடுகிறது: நான் வலைகளை போடுகிறேன்.

அத்தியாயம் 2

# சுய பாதுகாப்பு



# சுய பாதுகாப்பு



அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் பாரங்கள், உயர்த்தப்பட்ட பாரந்தூக்கிகள், பாய்மரக் கம்பங்கள், கிரேன்கள் ஆகியவற்றுக்கு கீழே ஒருபோதும் நிற்கக்கூடாது. பாரங்களைத் தூக்க பழுதடைந்த/சிதைந்த ஒயர் ரோப்புக்களையும் கயிறுகளையும் பயன்படுத்தக் கூடாது.



முன்னும் பின்னுமாக ஊசலாடும் பாரங்களை முறையாக இறுகக் கட்டாதவரை அவற்றின் அருகில் நிற்பதை தவிர்க்கவும்.





இறுக்கமாக கட்டப்பட்டிருக்கும் கம்பிகள் மற்றும் கயிறுகளுக்கு நேராக நிற்பதை/ உட்காருவதை தவிர்க்கவும். இறுகக் கட்டப்பட்டுள்ள கம்பிகள், கயிறுகள் அறுந்து போகுமானால், இழுத்துக்கட்டப்பட்டுள்ள திசையில் தெறித்து உடலுக்கு தீங்கு விளைவிக்கும்.

இறுக்கப்பட்டிருக்கும் ஒரு கம்பி அல்லது கயிற்றில் நிற்கக்கூடாது. இவை அறுந்து போனால் அது உங்களை காயப்படுத்தக்கூடும்.

அந்தரத்தில் வேலை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஒரு பாதுகாப்பு பட்டியைப் பயன்படுத்தவும். நீங்கள் சறுக்கினால் கூட உங்கள் பாதுகாப்பு பட்டி நீங்கள் கீழே வீழுந்து விடாமல் பாதுகாக்கும்.









இரப்பர் அல்லது பிளாஸ்டிக் காலணிகளை அணியக்கூடாது; பெரும்பாலும் தளங்கள் ஈரமாக இருப்பதால் கால்கள் சறுக்கி கீழே வீழ்வதை தவிர்க்க சரியான காலணிகளை அணியவும்.





சரியாக மூடாமல், பாதி திறந்த நிலையில் இருக்கும் திறப்புகள் மற்றும் நுழைவாயில்களின் மூடிகள் மீது கால் வைக்கவேண்டாம். இம் மூடிகள் அசையுமானால் அதனுள் நீங்கள் விழுந்து விடக்கூடும்.



கம்பிகளையும் (ஒயர் ரோப்புகள்), கயிறுகளையும் கையாளும்போது கையுறைகளை அணியவும்.





இயங்கிக்கொண்டிருக்கும் போது இயந்திரங்களை பழுதுபார்ப்பதையோ அல்லது சரிசெய்வதையோ ஒருபோதும் மேற்கொள்ளக்கூடாது.



சென்று கொண்டிருக்கும் கலன் முன்புறத்தை பார்த்தவாறு ஒரு பெரிய கனமான மீனை கலனுக்குள் இழுத்து எடுக்க முயற்சிக்கவேண்டாம். எப்போதும் உள்ளே எடுக்கும் முன்னர், மீன் நீங்கள் நிற்கும் நிலையைக் கடந்து பின்புறம் செல்ல அனுமதிக்கவும். இந்நிலை எந்தவொரு சிரமத்திலும் கலனின் இயக்கத்துடன் மீனை உயர்த்தி உள்ளே எடுக்கவோ அல்லது இயலவில்லை என்றால் விட்டுவிடவோ அனுமதிக்கிறது.




கடலினுள் விழுவதை தவிர்க்க, கலன் விளிம்பில் உள்ள கைபிடி கம்பிகளில் உட்காரக்கூடாது.


இரவு நேரத்தில் அல்லது கடல் கொந்தளிப்பின் போது தனியாக கலன் தளத்திற்கு செல்லாதீர்கள். கடல் கொந்தளிப்பாக இருக்கும்போது வேலை செய்யவேண்டிய தேவை ஏற்பட்டால், கலனில் இருந்து கடலினுள் விழாமல் பாதுகாத்துக் கொள்ள குழுவினர் பாதுகாப்பு கயிறுகளால் தங்களை பிணைத்து கொள்ளவேண்டும்.

எரிபொருள் கொள்கலன்களைத் திறக்கும் சமயத்தில், நல்ல காற்றோட்டம் இருக்கிறதா என்பதை உறுதிசெய்து கொண்டு திறக்கவும். எரிபொருள் கொள்கலன்களில் இருந்து வெளியேறும் புகையானது உடல் நலத்துக்கு பாதகமானது மற்றும் ஆபத்தானது. நீண்டகாலத்திற்கு மூடப்பட்டிருக்கும் தொட்டிகளில் கார்பன் மோனாக்சைடு போன்ற நச்சு வாயுக்கள் இருக்கலாம்.




உலோக வேலை, பற்றவைப்பு/ வெல்டிங் மற்றும் வர்ணம் பூசுதல் போன்ற வேலைகளில் ஈடுபடும்போது கதிர்கள், பறக்கும் துகள்கள் மற்றும் எரிச்சலூட்டக்கூடிய ஆவிகள் முதலியவற்றில் இருந்து கண்களை பாதுகாக்க அதற்கான கண்ணாடிகளை அணியவும்.

வெல்டிங் செய்யும்போது உங்கள் கண்களை பாதுகாக்க இருண்ட கண்ணாடிகளை அணியவும். காயமேற்படுவதில் இருந்து கைகளை பாதுகாக்க எப்போதும் கையுறைகளை அணியவும்.







ஒரு கயிற்றின் அல்லது கம்பியின் சுறுக்கில் ஒருபோதும் நிற்கக்கூடாது. அது திடீரென இறுகுமானால், ஒரு பெரிய காயமேற்படலாம்.





ஒரு கயிற்றை இளக்கும்போதோ அல்லது இழுக்கும்போதோ, கயிற்றை சுற்றி இருக்கும் கம்பத்தில் இருந்து சற்று தொலைவில் கயிற்றை பிடித்துக் கொண்டு நிற்கவும்.


தளங்களில் ஓடாதீர்கள் ஏணிகளில் வேகமாக இறங்காதீர்கள். நீங்கள் சறுக்குவதற்கோ அல்லது வழுக்குவதற்கோ அல்லது விழுந்து விடுவதற்கோ சந்தர்ப்பங்கள் மிக அதிகம். ஒருபோதும் கலனில் குதிக்காதீர்கள். கலனில் ஏறும் போதும், இறங்கும்போதும், ஏணி படிகளையோ அல்லது தொங்கு நடை பாதையையோ எப்போதும் பயன்படுத்தவும்.



ஒரு ஏணியிலோ அல்லது படிகளிலோ ஏறும்போது, ஏணியை அல்லது படிகளை முன்னோக்கி பார்த்தபடி, கைபிடி சட்டங்களை இறுக பிடித்தக்கொண்டு ஏறவேண்டும். வைக்கும் ஒவ்வொரு அடியையும் பார்க்கும் வகையில் நீங்கள் இருக்கவேண்டும். இந்நிலையானது படகு கணிசமாக உருண்டாலும் (ஆடினாலும்) உங்கள் சமநிலையைப் பராமரிக்க உதவும். ஒரு ஏணியில் ஏறும்போதும், இறங்கும்போதும் ஏணியை பார்த்த வண்ணம் இருக்கவும்.



மேற்தளத்துக்கு கீழே உள்ள பனிகட்டிகள் வைக்கும் அறைக்குள்ளோ அல்லது உறைவிப்பான் அறைக்குள்ளோ செல்லும்போது, உங்களை பாதுகாத்துக்கொள்ள முறையான துணிகள், காலணிகள், கையுரைகள் மற்றும் தலைக் கவசத்தை பயன்படுத்தவும்.



சூரிய வெப்பம் மிகுந்த நாட்களில் தொடர்ச்சியாக உங்களை வெப்பத்துக்கு ஆட்படுத்துதல் கண்களுக்கு பாதகமானது என்பதால் கருமை நிற கண் கண்ணாடிகளை அணியவும். ஒரு தொப்பி, முழுக்கை ஆடைகள் அணிந்து கொண்டு, முக பூச்சுக்களை அடிக்கடி பயன்படுத்துவது நல்லது.



சூரிய ஒளி நேரடியாக உங்கள் உடலில் படாத வண்ணம் பார்த்துக்கொள்ளுங்கள். அதிகமாக சூரிய ஊதா கதிர்களுக்கு உங்களை ஆட்படுத்தும்போது தோல் பிரச்சினைகள் அல்லது புற்றுநோய் கூட ஏற்படலாம்.





முதுகை மட்டும் வளைத்து அதிக பாரமான பொருட்களை ஒருபோதும் உயர்த்தக்கூடாது. மாறாக, உங்கள் கால்களை சிறிது அகட்டி வைத்து, முழங்காலை மடக்கி பாதி உட்கார்ந்த நிலையில், முதுகை நேராக வைத்துக்கொண்டு பாரத்தை நன்றாக இறுகப் பிடித்துக் கொண்டு பாரத்தை தூக்கி உயர்த்துங்கள். இம்முறையானது கடுமையான பின் விளைவுகள் கொண்ட முதுகுக் காயங்கள் ஏற்படாமல் உங்களை பாதுகாக்கும்.



கதவுகளும்,
சன்னல்களும் இறுகப்
பொருந்தியிருப்பதை
உறுதிசெய்து
கொள்ளுங்கள்.
படகின் முன் பின்
அசைவுகளாலும்,
பக்கவாட்டில் ஏற்படும்
அசைவுகளாலும்
கதவுகளும் சன்னல்களும்
ஆடி அசைந்து
காயமேற்படுத்தலாம்.



மூடிகளுக்கு இடையில், பாதுகாப்பு சட்டங்களுக்கு இடையில் அல்லது கலனுக்கும் இறங்கு துறைக்கும் இடையில் அல்லது இரு கலன்களுக்கு இடையில் கைகளை வைக்காமல் எப்போதும் உங்கள் கைகளை கவனமாக பாதுகாத்துக்கொள்ளுங்கள். கைகளை காயங்கள் ஏற்படாமல் பாதுகாத்தல் அவசியம்.




மின் கம்பிகளை பொருத்தும்போதும், கையாளும்போதும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பின்பற்றவும். மின்னமைப்புகளில் வேலை செய்வதற்கு முன் கலன் குழுவினருக்கு தகவல் தெரிவிக்கவும்.

மின்னல் மின்னும்போது மேற்தளங்களில் நிற்கக்கூடாது. நீங்கள் உயரமான இடத்தில் நிற்பதால் மின்னல் உங்களின் உடலூடாக பூமியைச் சென்றடையும் சாத்தியங்கள் அதிகம். சுக்கான் அறையில் தங்குவதால் சுக்கான் அறையின் கூரை கவசமாக இருந்து உங்களை எப்போதும் பாதுகாக்கும்.



முடிந்தவரை ஈரமில்லாத, தூய்மையான மற்றும் நேர்த்தியான ஆடைகளை உடுத்துங்கள். நகர்ந்து கொண்டிருக்கும் இயந்திர பாகங்களுக்கு கீழோ அல்லது விழக்கூடிய பொருட்கள் உள்ள பகுதிகளிலோ வேலைகளில் ஈடுபடும்போது கடினமான தொப்பியையோ அல்லது தலை கவசத்தையோ அணியவும்.



உங்கள் கடற்றொழில் கத்தியை எப்போதும் உறையினுள் வைத்திருக்கவும். இது எதிர்பாராத வெட்டு மற்றும் சிராய்ப்புகளை குறைக்கும்.





எப்போதும் கதவுகளின் வழியாக நுழையும்போது தலையில் இடித்துக் கொள்ளாமல் கவனமாக இருக்கவும். கலன் கதவுகள் வீட்டுக் கதவுகளை விட உயரம் குறைவானவை.







போதிய அளவு வெளிச்சமில்லாத, இருண்ட கொள்கலன்களுக்குள் மற்றும் தள அறைகளுக்குள் இறங்காதீர்கள். இயந்திர அறையிலும், சுக்கான் அறையிலும் பொதுவான ஒளியூட்டும் விளக்குகளுடன், அவசர ஒளியூட்டும் விளக்குகளும் கட்டாயம் இருக்கவேண்டும்.

அதிகப்படியான சாராய பயன்பாடோ அல்லது போதை மருந்துகளின் தவறான பயன்பாடோ கலன் மற்றும் அதன் குழுவினரின் பாதுகாப்புக்கு ஒரு அச்சுறுத்தலாகும். வீட்டில் தயாரிக்கப்படும் வலுவான சாராயத்தையும் கள்ளச் சாராயத்தையும் குடிக்கக்கூடாது. விச சாராயத்தை குடித்ததால் பல இறப்புகள் நிகழ்ந்து இருக்கின்றன.



கூர்மையான கத்தி அல்லது பொருளை மற்றவருக்கு கொடுக்கும்போது கைப்பிடியைப் பிடித்த வண்ணம் கொடுக்கக்கூடாது. எப்போதும் கூர்மையான பகுதியை நாம் பிடித்தபடி பெறுபவர் கைப்பிடியைப் பிடிக்கும் வண்ணம் கொடுக்கவேண்டும்.





கடினமான பொருட்களைக் கத்தியால் வெட்டும்போது, கத்தி வெட்டும் நபரை நோக்கி இருக்கக்கூடாது. எப்போதும் உங்களுக்கு எதிர்த் திசையில் தூரமாக வைத்துக்கொண்டு வெட்டவோ அல்லது கூராக்கவோ வேண்டும்.







வைரஸ் நோய் தாக்கத்தை தவிர்ப்பதற்கு
கடற் பயணத்திற்கு முன் தடுப்பூசியை நீங்கள்
ஏற்றிக்கொள்ளவும்.

நீங்கள் தாகத்தினால் தவித்தாலும் கடல் நீரைக் குடிக்காதீர்கள்.
கடல் நீரைக் குடிப்பதை காட்டிலும், தண்ணீர் குடிக்காமல்
இருப்பதன் மூலம் நீண்ட நாட்கள் உயிர் வாழலாம்.



உடலுடன் ஒட்டிய இறுக்கமான ஆடைகளை அணியவும், இது மீன்பிடி தளவாடங்கள், வின்ச் அல்லது இயந்திரங்களுடன் சிக்கிக் கொள்ளும் சந்தர்ப்பங்களை குறைக்கும். வெளியில் தெரியும்படி இருக்கும் பட்டன்கள் வலைகளுடனோ அல்லது பிற மீன்பிடி தளவாடங்களுடனோ சிக்கிக்கொள்ளும் ஆபத்தை குறைக்க அவற்றை நாடாவால் மூடி ஒட்டவும்.



நீண்ட கூந்தலை தலை தொப்பியினுள் மடித்து கட்டி வைக்கவும். இதன் மூலம் கூந்தல் கப்பிகள், இழு கருவிகள் மற்றும் பிற தளவாடங்களில் சிக்கிக்கொள்ளும் வாய்ப்பை குறைக்கலாம்.






மோதிரங்களையும், வலையல்களையும்
அணிவதை தவிர்க்கவும். இவை கயிறுகள்,
வலைகள் மற்றும் பிற மீன்பிடி தளவாடங்களினுள்
அகப்பட்டுக் கொள்ளலாம்.


இயந்திர அறையின் வாயில்
மூடி திறந்திருக்கும்போது
கவனமாக செயல்படவும்.
சில படகுகளில் இயந்திர
அறைக்குச் செல்வதற்கான வழி
குழுவினர் தங்குமிடம் மூலமாக
இருக்கலாம், அப்படி இருந்தால்,
இயந்திர அறையினுள் விழுந்து
விடக்கூடும்.



அந்தரத்தில் தொங்கியபடி வேலையில் ஈடுபடும்போது கருவிகள் மற்றும் பெயிண்ட் வாளிகளை கட்டி வைக்கவும். இதனால் கீழே இருப்பவர்கள் மீது அவை வீழ்ந்து காயப்படுத்துவதை தவிர்க்கலாம்.



மற்றவர்கள் அழைக்காமல், அவர்களின் வேலையில் தலையிடாதீர்கள். பணியாற்றும் இடத்தில் உள்ளபோது பொருத்தமான ஆடையை அணியவும்.



கப்பிக்கு ஒரு கயிற்றை இழக்கிக் கொடுக்கும்போது கைகளை கொண்டு எப்போதும் முயற்சிக்காதீர்கள். எப்போதும் உபகரணத்தை பயன்படுத்தவும். நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு கயிற்றை ஒருபோதும் கையால் பிடிக்காதீர்கள்.







நீங்கள் ஓய்வு நேரங்களின் போது வேலை செய்யும் இடத்தில் இருந்து விலகி இருங்கள். நன்கு ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்.

உயிருடன் இருக்கும் ஒரு பெரிய மீனைக் கட்டுப்படுத்த முயற்சிக்கக்கூடாது. ஒரு சுறா மீனானது கொல்லப்பட்ட பின்னால் கூட அதன் வாயும் பற்களும் குறிப்பிட்ட நேரத்துக்கு உயிர்ப்புடன் இருக்கும். திருக்கை மீனின் வாலின் நடுப்பகுதியில் இருக்கும் முள் மனிதனை கொல்லக்கூடிய நச்சுத்தன்மை கொண்டது.









காற்றினால் பருத்திருக்கும் முட்களைக் கொண்ட மீன்களை (Puffer fish) உண்ணவேண்டாம், அவை நச்சுத்தன்மை கொண்டவை. செதில்களால் உடல் மூடப்பட்டிருக்கும் மீன்கள் உண்பதற்கு உகந்தவைகளாகும்.

தண்ணீரில் மிதக்கும் சொறி முட்டைகளையோ அல்லது பிற உயிரினங்களையோ வெறுங்கையால் தொடவேண்டாம். அவற்றை தொடுவதால் உங்கள் தோலில் அரிப்பு ஏற்படலாம்.







மீன்களின் கூர்மையான முட்கள், எலும்புகள் மற்றும் துடுப்பில் உள்ள முட்கள் ஆபத்தானவை என்பதால் மீன்களை வெட்டும் போது அதிக கவனத்துடன் வெட்டவும்.



சூரிய ஒளி குறைப்பு கண்ணாடிகள் அல்லது பாதுகாப்பு கண்ணாடிகளை அணிந்து கொள்வதால் உங்கள் கண்களை இழுத்தெடுக்கப்படும் மீன் தூண்டில் முட்களிடமிருந்து பாதுகாத்து கொள்ளலாம்.



பெரிய மீன்களை
ஒருபோதும் கைகளால்
தூக்க வேண்டாம்,
ஒரு கப்பியை அல்லது
இழுவை கருவியைப்
பயன்படுத்தவும்.





குளிரூட்டப்பட்டு, உறைய வைக்கப்பட்ட பெரிய மீன்களை கையாளும்போது பாதுகாப்பான காலணிகளை அணிந்திருக்கவும்.

## பணி குழுவினரின் பாதுகாப்பும் உடல்நலமும்

- கலன் முதல்வர் உரிமையாளரின் பிரதிநிதியாக பணி குழுவினரின் பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் மீன்பிடி கலனின் பாதுகாப்பான செயல்பாடு ஆகியவற்றிற்காக ஒட்டுமொத்த பொறுப்பையும் கொண்டுள்ளார்.
- பணிக்குழுவினர் தங்கள் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு, அதே போல் பிற பணிக்குழு உறுப்பினர்கள், கலனில் இருக்கும் மற்றவர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பை பராமரிக்க உரிமையாளர், கலன் முதல்வர் மற்றும் பிற பணிக்குழு உறுப்பினர்களுடன் ஒத்துழைக்கவேண்டும்.
- பணிக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தங்களுக்கு ஏற்படக்கூடிய மருந்து வகைகளின் ஒவ்வாமை பற்றியும், பிற மருந்து வகைகளின் தேவை (ஏதாவது இருந்தால்) பற்றியும் கலன் முதல்வருக்கும், அவரின் சகாக்களுக்கும் தகவல் தெரிவிக்கவேண்டும்.
- பணிக்குழ உறுப்பினர்களில் எவரேனும் உடல் நலங்குன்றி மருந்துகளை எடுத்துக்கொண்டால், அவர்கள் கடற்பயணத்தின் முழுமையான காலத்திற்கும் போதுமான அளவு மருந்து வகைகளை கடற்பயணத்தின் போது உடன் எடுத்துச்செல்லவேண்டும்.
- பணிக்குழு உறுப்பினர்கள் கடலில் தங்குவதற்கு இடையூறு விளைவிக்கக்கூடிய வில்லங்கங்கள் ஏதும் இல்லாமல் இருக்கவேண்டும்.
- நோய் வாய்பட்டு இருப்பதாக சந்தேகிக்கப்படும் எந்தவொரு பணிக்குழு உறுப்பினரையும் கடற்பயணத்தில் சேர்த்து கொள்ளக்கூடாது.

# கடலினுள் வீழ்வதை தவிர்ப்பதற்கு மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கைகள்

- கலனில் இருந்து கடலினுள் வீழ்வது கடலில் இறப்பதற்கு ஒரு முக்கிய காரணமாக இருப்பதால், கடலினுள் விழாமல் இருப்பதற்கு எப்போதும் பாதுகாப்புடன் இருக்கவேண்டும்.
- பயணிக்கும் திசை அல்லது வேகத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டால், இயக்கத்தில் உள்ள மாற்றம் மற்றவர்களுக்கு தெரியாமல் போகலாம் என்பதால், எச்சரிப்பது அவசியமாகிறது.
- பணிக்குழுவினர் கலனில் இருந்து கடலினுள் வீழ்ந்து விடாமலும், கடல் கொந்தளிப்பில் கடலுடன் அடித்து செல்லப்படாமலும் தடுக்க, கலனின் வகுப்பு மற்றும் அளவுக்கு ஏற்றவாறு உயிர்காப்பு கயிறுகளை உருவாக்கவேண்டும். மோனோ ரோப்புகளுடன் உயிர்காப்பு கயிறுகளையும் வேலை தளத்துடன் பிணைத்து இணைக்கப்படவேண்டும்.
- கீழே விழவோ அல்லது கலனில் இருந்து கடலினுள் விழவோ ஒரு அபாயம் நிலவும் இடங்களில் வேலையை மேற்கொள்ளும்போது அல்லது மோசமான வானிலையில் தளங்களில் வேலையை மேற்கொள்ளும்போது ஒரு பாதுகாப்பு கயிற்றுடன் இணைக்கப்பட்ட பாதுகாப்பு அணி பயன்படுத்தப்படவேண்டும். பாதுகாப்புக்கான கயிற்றின் நீளம் கடலினுள் வீழ்வதை தடுக்கும் வகையில் சரிசெய்யப்படவேண்டும். பாதுகாப்பு அணி மற்றும் பாதுகாப்பு கயிறு பயன்படுத்தப்படவில்லை என்றால், பின்னர் அவற்றுக்கு பதிலாக ஒரு உயிர்காப்பு உடையையோ அல்லது ஒரு பாதுகாப்பான வேலைக்கான கவசத்தையோ பயன்படுத்தவும்.
- கலன் சென்று கொண்டிருக்கும்போது கலனுக்கு வெளிப்புறமாக வேலை என்பது முற்றிலும் தேவையானபோது மட்டுமே மேற்கொள்ளப்படவேண்டும். இத்தகைய வேலையை மேற்கொள்ளும் முன் தேவையான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.



# உயிர்காப்பு சாதனங்கள்

அங்கீகரிக்கப்பட்ட உயிர்காப்பு உடைகள் கலனில் ஒவ்வொரு பணிக்குழு உறுப்பினருக்கும் இருக்கவேண்டும்.



தளங்களில் வேலை செய்யும்போது உயிர்காப்பு உடைகளை அணிந்திருக்கவும். ஒரு உயிர்காப்பு உடையுடன் தண்ணீரில் நீங்கள் உயிர்வாழும் வாய்ப்புக்கள் மிகவும் அதிகமாகின்றன.



உயிர்காப்பு உடைகள் உடனடியாக அணுகக்கூடிய இடத்தில் இருக்கவேண்டும், அவை இருக்குமிடம் தெளிவாக சுட்டிக்காட்டப்படவேண்டும்.



ஒரு கலனில் இருந்து கடலினுள் விழுந்து விட்ட நபருக்கு உதவ உயிர்காப்பு வளையங்கள் கலனில் இருக்கவேண்டும். உயிர்காப்பு வளையத்தை சுயமாக ஒளிரும் ஒரு விளக்கு அல்லது ஒரு மிதக்கக்கூடிய உயிர்காப்பு கயிற்றுடன் இணைத்து தயாராக வைத்திருப்பது அவசியம்.


அவசரக்காலங்களில்
உதவி தேவைப்படும்போது
உங்கள் நிலையை
மற்ற கலன்களுக்குச்
சுட்டிக்காட்டும் வகையில்
சுடர்கள், புகை சமிக்கைகள்
மற்றும் பாராசூட்கள்
கலனில் இருக்கவேண்டும்.


ஒரு ரேடார் பிரதிபலிப்பான் உங்களை நெருங்கி வரும் கலன் தன் ரேடாரில் முன்கூட்டியே உங்களை பார்க்க அனுமதிக்கிறது. இது அவர்கள் உங்களையும், உங்கள் வலைகள் மற்றும் கயிறுகள் மீது கலன் சென்றால் ஏற்படக்கூடிய சேதத்தை தவிர்க்கும் வகையில் போதுமான நேரத்தை கொடுக்கும். ஒரு ரேடார் பிரதிபலிப்பான் கலனில் பொருத்தப்பட்டு இருப்பதால் அவசர சூழ்நிலையில் மீட்புக் கலன்கள் உங்கள் கலனின் இருப்பிடத்தை கண்டுபிடிப்பது எளிதாகும்.

# குளியோடி மீன்பிடித்தலுக்கான பாதுகாப்பு முறைமைகள்

ஸ்கூபா (scuba) உபகரணத்தையோ அல்லது மேற்புறத்திலிருந்து குழாய் வழியாக காற்றை வழங்கும் உபகரணத்தையோ பயன்படுத்தும் சிறுதர மீனவர்களுக்கு உபயோகப்படுத்தும் நடைமுறைகளில் பயிற்சியளிக்கவேண்டும்.

அனைத்து குளியோடும் (diving) நடவடிக்கைகளுக்கும், பணிக்குழுவினரின் குறைந்தபட்ச தேவைகளை பின்பற்றவேண்டும். குளியோட்ட மேற்பார்வையாளர் ஒருவர் இருக்கவேண்டும், அவர் கட்டுப்பாட்டில் குளியோடுதல் மேற்கொள்ளப்படவேண்டும்.

பிற தேவைகள்:

1. அனைத்துக் குளியாட்களும் போதுமான பயிற்சியை முடித்துள்ளனர் மற்றும் குளியோடுவதற்கு தேவையான உபகரணத்தின் நடைமுறைகளை அறிந்துள்ளனர் என்பதை வேலைக்கு அமர்த்துபவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.
2. குளியோடும் நிகழ்வின்போது, தேவைப்பட்டால் அவசர உதவியளிக்க, ஒரு காத்திருப்பு/மாற்றீட்டு குளியாள் எல்லா நேரத்திலும் குழியோடும் இடத்தில் இருக்கவேண்டும். மாற்றீட்டு குளியாள் ஒரு நிமிடத்திற்குள் தண்ணீரில் பாய்வதற்கு தயாராக இருக்கவேண்டும்.
3. குளியோடும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் ஒவ்வொரு கலனும் அவசர சேவைகளின் வசதிகளை பெறுவதற்காக ஒரு வானொலி அல்லது ஒரு அலைபேசியை வைத்திருக்கவேண்டும்.
4. பிராண வாயு மருத்துவ உபகரணம் உள்ளிட்ட, தேவையான அனைத்து முதல் உதவி உபகரணங்களும் குளியோடும் தளத்தில் இருக்கவேண்டும். குளியாள் ஒவ்வொருவரும் செயற்கை சுவாசத்திலும் **(CPR)** மற்றும் பிராண வாயு அளித்தலிலும் தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும்.
5. குளியோட்ட மேற்பார்வையாளரும், குளியாளும் தனித்தனி குளியோடும் குறிப்பு பதிவேடை வைத்திருக்கவேண்டும். உபகரணங்களின் வகை, வாயுவின் தன்மை, நேரம், அதிகபட்ச ஆழம், மேற்பரப்பு இடைவெளி, பயன்படுத்தப்பட்ட அமுக்க தாக்க அட்டவணை, நாள் மற்றும் குறிப்புகள் ஆகியவற்றை இந்த குறிப்பு பதிவேட்டில் உள்ளடக்கவேண்டும். குளியோட்ட மேற்பார்வையாளர் குறிப்பு பதிவேட்டில் குளியோட்டத்தின் முடிவில் தரவை பூர்த்தி செய்யவேண்டும்.
6. குளியோடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கலன்களில் ‘‘ஆல்பா’’ பன்னாட்டு குறியீடை காட்சிப்படுத்தவோ அல்லது கொடியை பறக்கவிடவோ செய்யவேண்டும். குளியோடும் செயல்பாடு நிகழ்ந்து கொண்டிருக்கையில் இந்த கொடியைக் காட்சிப்படுத்தவேண்டும் மற்றும் அனைத்து குளியாட்களும் தண்ணீரில் இருந்து கலனுக்கு திரும்பியவுடன் இந்த கொடி இறக்கப்படவேண்டும்.



7. ஒவ்வொரு குளியோட்ட கலனும் அருகாமையில் உள்ள அமுக்க தாக்க வசதிகள் கொண்ட கடலோர காவற் படை, மருத்துவ விமான சேவைகள், கப்பற்படை மற்றும் குளியோடும் மருத்துவத்தில் தகுதி வாய்ந்த மருத்துவர்கள் முதலியவர்களின் இருப்பிடங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்களின் புதுப்பிக்கப்பட்ட பட்டியலை வைத்திருக்கவேண்டும்.
8. 40 வயதுக்கு மேற்பட்ட குளியாட்களை குளியோட்ட மருத்துவத்தில் தேர்ச்சியடைந்த ஒரு மருத்துவரிடம் ஆண்டுக்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும். 40 வயதுக்கு உட்பட்டவர்களை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும். ஒவ்வொரு குளியோட்டத்தின் பின்னும், குளியோடிகள் குறைந்தபட்சம் 24 மணி நேரத்துக்கு ஒரு மருத்துவ எச்சரிக்கை பட்டியை அணிந்திருக்கவேண்டும். இந்த

பட்டியை அணிந்திருப்பவர் அமுக்க தாக்க நோய் போன்ற குளியோட்ட நோய் தாக்கத்துக்கு ஆட்படலாம் என்பதை மற்றவர்களுக்கு தெரிவிக்கும்.

9. ஒரு குளியாள் கடலில் இருந்து படகிற்கு எளிதாக ஏறிவரும் வகையில், ஒரு ஏணியை போதுமான அளவுக்கு தண்ணீருக்குள் இறக்கி வைத்திருக்கவேண்டும்.

10. நீங்கள் நீரின் மேற்பரப்புக்கு மிக வேகமாக உயரக்கூடாது என்பதில் கவனமாக இருங்கள், ஏனெனில் இது அமுக்க தாக்க நோயை ஏற்படுத்தக்கூடும்.

11. குளியாட்கள் ஒவ்வொருவரும் உயிர்காப்பு கயிறுகள், மிதவைகள், அல்லது குரல் ஒலி மூலம் ஒரு சக குளியோடியுடன் அல்லது மேற்பரப்பில் உள்ளவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கவேண்டும்.

12. குளியாட்கள் திட்டமிடப்பட்ட நேர அளவை காட்டிலும் அதிகமாக குளியோடக்கூடாது.

13. ஸ்கூபா குளியாட்கள் 40 மீட்டர்கள் (130 அடிகள்) ஆழத்துக்கு அதிகமாக குளியோடக்கூடாது.



14. ஸ்கூபா வாயு கொள்கலன்களின் உட்புறங்களை கண்களால் பார்த்து ஒவ்வொரு ஆண்டும் சோதனை செய்யவேண்டும். ஒவ்வொரு ஐந்தாண்டும் இக்கொள்கலன்களை நீர் அமுக்க சோதனைக்கு உட்படுத்தவேண்டும்.

15. குறைந்தபட்சம், ஸ்கூபா குளியாட்கள் குளியோட்ட மேற்பார்வையாளரால் குறிப்பிடப்பட்டவாறு பின்வரும் உபகரணங்களை பயன்படுத்தவேண்டும்:

- விரைவாக விடுவிக்கக்கூடிய இறுக்கப்பட்டி மற்றும் ஒரு அழுத்தமானியுடன் ஸ்கூபா அலகு
- முகக் கவசம் மற்றும் ஸ்நோர்கெள்
- நீச்சல் துடுப்பு மற்றும்/அல்லது காலணிகள்
- ஈர அங்கி அல்லது உலர் அங்கி
- கையுரைகள்
- குளியோட்ட கத்தி
- ஆழங்காட்டும் கருவி, நீரின் அழுத்தம் காட்டுங்கருவி மற்றும் திசைகாட்டி
- மிதவை கட்டுப்பாடு சாதனம் – BCD
- வாயு கொள்கலன்கள் (ஸ்கூபா உருளைகள்) மற்றும் இரு வாய் முனைகளுடன் ரெகுலேட்டர்
- நீருக்கடியில் கழிந்த நேரத்தைக் காட்டும் கடிகாரம் மற்றும் குளியோட்ட கணினி
- விரைவாக விடுவிக்கக்கூடிய பிணைச்சலால் இணைக்கப்பட்ட ஒரு எடை
- நீருக்கடியில் பயன்படுத்தக்கூடிய ஒளி விளக்கு
- மேற்பரப்பு மார்க்கர் சமிக்ஞை/மிதவை (SMB) பெட்டி

16. மேற்பரப்பிலிருந்து உபகரண வசதிகள் வழங்கப்படும் குளியோட்டத்தில் ஈடுபடும் குளியாட்கள் பாதுகாப்பான குளியோடுதலை உறுதிசெய்ய அவர்களுக்கு இருக்கும் ஆழம் மற்றும் கால எல்லையை அறிந்திருக்கவேண்டும்.

17. மேற்பரப்பிலிருந்து உபகரண வசதிகள் அளிக்கப்படும் குளியோடுதலில் ஈடுபடும் குளியாட்கள் அதற்கான கடற்கல வசதிகளைக் கொண்டிருக்கவேண்டும்.

18. ஒவ்வொரு குளியாளின் காற்றுக்குழாயில் ஒரு அழுத்தமானி மற்றும் ஒரு பிரிக்கும் தடுக்கிதழ் இருக்கவேண்டும்.

19. வாயு வழங்கும் குழாய் அல்லது தலைக் கவசத்தில் தேவையற்ற அழுத்தத்தை குறைக்க மேற்பரப்பில் இருந்து வழங்கப்படும் குழாய்கள் உயிர்காப்புக் கயிற்றுடன் இணைக்கப்படவேண்டும். உயிர்காப்புக் கயிறானது 16 எம் எம் விட்டத்தில், பாலிபுரோபைலின் அல்லது அதுக்கு சமமான செயற்கை இழைகளால் ஆனதாக இருக்கவேண்டும். குளியாட்கள் மேற்பரப்பிலிருந்து வழங்கப்படும் குளியோட்டத்துக்காக வடிவமைக்கக்கப்பட்ட பொருத்தமான குழாய்களை மட்டும் பயன்படுத்தவேண்டும்.

அத்தியாயம் 3

# நிலைத்தன்மை



# நிலைத்தன்மை



நீர்க்கசிவை தடுக்கக்கூடிய கதவுகளை பயன்படுத்தாதபோது, மூடிவைக்கவும்.

குறிப்பாக கடல் கொந்தளிப்பு குறித்த அறிவிப்பின்போது இந்த நீர்க்கசிவை தடுக்கக்கூடிய கதவுகள் பாதுகாப்பாக மூடப்பட்டு இருப்பதை உறுதிபடுத்தவும்.



அடைபட்ட நீரகற்றும் பாதைகள் கலனின் நிலைதன்மைக்கு ஒரு மோசமான பாதிப்பை ஏற்படுத்தலாம்.



கொந்தளிப்பான கடற்கால நிலையின்போது தளங்களில் சேரும் கடல் நீரை விரைவாக வெளியேற்ற உதவும் நீரகற்றும் பாதைகள் அனைத்தும் கழிவுகள் மற்றும் தளவாடங்களால் அடைபடவில்லை என்பதை உறுதி செய்யவும்.




அதிகப்படியான பாரம் கலனில் ஏற்றப்படவில்லை என்பதை உறுதிசெய்யுங்கள். இயன்றவரை பாரமான பொருட்களை கலனின் அடிப்பகுதியில் வைப்பதை பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். இது கலனின் நிலைத்தன்மையை அதிகரிப்பதற்கும், கலன் மூழ்கும் சாத்தியத்தைக் குறைப்பதற்கும் உதவும்.




கலனை நீட்டித்தல், கலனோட்டுபவர் அறையில் மாற்றங்கள் மற்றும் கொள்கலன் மறுவடிவமைப்புகள் போன்ற மாற்றியமைத்தல்களை மேற்கொள்ளக்கூடாது, இவை கலனின் நிலைத்தன்மையைக் குறைக்கும்.





எல்லாக் கதவுகளின் பிணைப்புகள் மற்றும் கைபிடிகளைத் தவறாமல் ஆய்வு செய்து உராய்வு நீக்கி இட்டு பாராமரிக்கவும்.

கலனில் உள்ள அனைத்து கொள்கலன் தடுப்புகளும் நீர்க்கசிவு இன்றி இருப்பதை உறுதிசெய்யங்கள்.



# மீன்பிடி கடற்பகுதிக்கும், திரும்ப இறங்கு துறைக்குமான பயணம்

## கலன் நிலைத்தன்மையை பராமரித்தல்

- படகைக் கட்டுமானம் செய்தவர் வழங்கிய நிலைத்தன்மைக் கையேட்டில் உள்ள பரிந்துரைகளுக்கேற்ப படகில் பாரமேற்றவும். அதிகப்படியான பாரத்தை கலனில் ஒருபோதும் ஏற்றாதீர்கள். கலனின் உரிமையாளர் எரிபொருள், பனிக்கட்டி, மற்றும் நீண்டகாலம் கடலில் தங்குவதற்கு தேவையான பிற பொருட்களுடன் அதிகப்படியான பாரத்தை கலனில் ஏற்றவில்லை என்று உறுதிசெய்யவேண்டும்.
- கலன் கொள்ளளவு எல்லைகளுக்கேற்ப கணக்கிட்டு, மீன்பிடி பயணங்கள் திட்டமிடப்பட வேண்டும். அமிழ்வு ஆழக்கோடுகள் மற்றும் சுமையேற்றக் கோடுகள் படகில் அதிக பாரம் ஏற்றப்படவில்லை என்பதை கண்டுபிடிக்கும் சிறந்த வழிமுறைகளாகும்.
- தளங்களில் அல்லது தளஅறைகளில் மீன்கள் உள்ள வலைகளை கண்டபடி போடாதீர்கள். சுதந்திரமாக மீன்கள் நகருமானால் கலனின் நிலைத்தன்மை குறையும். முறையாக பிரித்தெடுக்கக்கூடிய சட்டத்தடுப்புகள் மீன்கள் நகராமல் ஒரே இடத்தில் வைத்திருக்க உதவும்.
- செவுள் வலைகள், சுருக்குமடி வலைகள் முதலியவற்றை இயந்திரக்கப்பி மூலம் இழுத்து தளத்துக்கு கொண்டுவரும்போது படகின் நிலைதன்மையில் அதிகக் கவனம் எடுக்கவும். மீன்கள் அதிகம் உள்ள வலை கலன் நிலைத்தன்மையை பெரியளவில் குறைக்கலாம்.
- பெரும்பாலான பல நாள் மீன்பிடி படகுகளில் உலர்ந்த மீன்கள் கலனோட்டும் அறையின் கூரை மேல் அடுக்கி வைக்கப்படுகின்றன. கலனின் உயரமான பகுதியில் பாரம் ஏற்றப்படுவதால்/அதிகரிப்பதால் புவியீர்ப்பு மையம் பாதிக்கப்பட்டு, நிலைத்தன்மை கணிசமாக குறையும் என்பதால் இதை செய்யக்கூடாது.
- அரைவாசி நிரம்பிய நிலையில் கொள்கலன்கள் இருப்பது நல்லதல்ல. கொள்கலனின் மேற்புறம் வெற்றிடமாக இருப்பதன் விளைவாக புவியீர்ப்பு மையம் பாதிக்கப்பட்டு, கலனின் நிலைதன்மையைக் குறைக்கலாம். முழுமையாகவோ அல்லது காலியாகவோ கொள்கலன்கள் இருக்கவேண்டும்.
- நல்ல சாதகமான நிலைத்தன்மையை கலன்கள் பெற்றிருக்கவேண்டும். அத்தன்மையிலிருந்து அதிக அளவு மாறுபடக்கூடாது.
- கலனின் அடித்தளத்தில் சேரும் நீரை அடிக்கடி வெளியேற்றி, அந்த பகுதியில் தண்ணீர் சேராமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

**நீங்கள் ஆபத்து நிலையில் இருக்கின்றீர்கள் என்றால்...**

கலனின் பக்கவாட்டு அலைவு நேரம் அதிகமாக அதிகமாக அதன் நிலைத்தன்மை குறைகிறது, இதில் தொடர் கவனம் அவசியம். ஒரு பக்கவாட்டு அலைவின் முடிவினை நுட்பமாக கவனிக்கவும், பக்கவாட்டு அலைவின் முடிவில் கலன் உடனடியாக நிலைபாட்டுக்கு வராமல் தாமதிக்குமானால் நீங்கள் மிகவும் மோசமான ஆபத்தில் இருக்கின்றீர்கள் என்பது அர்த்தமாகும்.

# கடலில் உயிர் பிழைத்திருத்தல்



# இயந்திர செயலிழப்பின் போது எவ்வாறு செயல்படவேண்டும்

ஒரு இயந்திரச் செயலிழப்பு நேரங்களில், சூழ்நிலையை எவ்வாறு கையாளுவது என்பதை நீங்கள் அறிந்திருக்கவேண்டும். சூழ்நிலையைக் கட்டுக்குள் கொண்டுவர பின்வரும் குறிப்புகள் உதவும்.

- நீங்கள் இருக்கும் கடலின் சரியான புவிசார் நிலைப்பாட்டை கண்டறிந்து, உங்களுக்கு உதவி தேவைப்படும் இடத்துக்கு அண்மையில் உள்ள உள்ளூர் அதிகாரிகளுக்கும், பிற கலன்களுக்கும் தெரிவிக்கவும். நீங்கள் சரியான புவிசார் நிலையை அவர்களுக்கு தெரிவிப்பது அவசியம்.
- ஒரு வரைபடத்தில் உங்கள் நிலையை வரைந்து, படகு காற்றில் போக்கில் போவதை கவனிக்கவும். கலன் கரையில் இருந்து விலகிப் போகிறது என்றால், உங்கள் வலைகளை கயிறு போல திரித்து, அதன் ஒரு முனையில் நங்கூரத்தைக் கட்டி கடலில் இறக்கி விடுங்கள். இது படகு விலகி செல்வதை குறைப்பதோடு, ஆரம்ப புவி நிலைக்கு அருகாமையில் உங்கள் நிலைபாட்டை பராமரிக்க உதவும்.

பின் வருபவை மூலம் நீங்கள் ஒரு துன்ப எச்சரிக்கை கொடுக்கலாம்:

- வி எச் எப் சேனல் 70;
- MF/HF அதிர்வெண்களில் 2187.5 kHz, 8414.5 kHz, 4207.5 kHz, 6312 kHz, 12577 kHz, அல்லது 16804.5 kHz ல்.



- கடல் நங்கூரம் கிடைத்தால் கடலில் இறக்கி விடுங்கள்.
- பழுது பார்க்கக்கூடியதாக இருந்தால், கையில் உள்ள உதிரிப் பாகங்களை பயன்படுத்தி இயந்திரத்தின் பழுதைச் சரிசெய்ய முயற்சிக்கவும்.
- பழுது உங்கள் கட்டுப்பாடுக்கு அப்பாற்பட்டது என்றால், அருகாமையில் அல்லது அண்மையில் உங்களுக்கு உதவி செய்யக்கூடிய கலன்களைத் தேடுங்கள்.
- பேட்டரிகளின் சக்தியை பாதுகாக்க வானொலியின் பயன்பாடை குறைக்கவும்.
- ஒரு நாளுக்கு குறைந்தபட்சம் இருமுறையாவது உங்கள் நிலைப்பாடு பற்றி உள்ளூர் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவும்.
- கலன் முதல்வர் பணிக்குழுவினரை தனது கட்டுப்பாட்டில் கண்டிப்பாக வைத்திருக்கவேண்டும், கலன் முதல்வர் பீதி அடையக்கூடாது.
- கலன் கரையை நோக்கி தானாக நகர்ந்தால், அப்படியே விடவும். பாய், மரம் கிடைத்தால் பயன்படுத்தவும்.
- நீண்டகாலம் கடலில் உயிரோடு இருக்கும் வகையில், தண்ணீரையும், பிற உணவு பொருட்களையும் மிகவும் சிக்கனமாக பயன்படுத்தவும்.
- கலன் பராமரிப்பு மற்றும் பிற கடினமான பணிகள் போன்ற அன்றாட வழக்கங்களில் பணிக்குழுவை ஈடுபடுத்தவேண்டாம். இதனால் அவர்களது உடல் ஆற்றல் பாதுகாக்கப்படும்.
- உங்களுக்கு உதவக்கூடிய கலன் கடந்து செல்வதை கண்டுபிடிக்கும் வகையில் தொடர்ச்சியாக உற்றுநோக்குவதையும், கவனத்தையும் பராமரிக்கவும்.
- கலனில் விஎச்எப் ரேடியோ கிடைத்தால், பிற கலன்களின் கவனத்தை கவரும் வகையில் சேனல் 16 ல் எஸ்ஓஎஸ் அல்லது மேடே கமிக்ஞைகளை அனுப்பிக் கொண்டிருங்கள்.
- அண்மையில் இருக்கும் ஒரு கலனைக் காணமுடிந்தால் பின்வரும் செயல்களைச் செய்து அதன் கவனத்தை ஈர்க்க முயற்சிக்கவும்:

சுக்கான் அறையின் மேல் அல்லது நன்கு தெரியக்கூடிய மற்றொரு இடத்தில் நின்றுகொண்டு இரண்டு கைகளையும் நன்றாக நீட்டி மேலும் கீழும் மெதுவாக பலமுறை அசைக்கவும்.




எண்ணெய் தோய்ந்த கந்தல் துணிகளை ஒரு வாளியில் போட்டு தீமூட்டி மிதக்கக்கூடிய கயிற்றின் ஒரு முனையில் கட்டி கலனில் இருந்து சற்று தூரத்தில் எரிய விடவும், இதன் மூலம் நீங்கள் இருக்கும் இடத்தை மீட்புக்கலன் அறிந்துகொள்ளலாம்.


ஒரு கண்ணாடி மூலம் அல்லது ஒளியைப் பிரதிபலிக்கக்கூடிய ஏதாவது ஒரு பொருள் மூலம் சூரிய ஒளியைத் தொடர்ந்து நெருங்கக்கூடிய கலன் மீது பாய்ச்சவும்.



பக்கத்தில் கடந்து செல்லும் கலனின் கவனத்தை பெற ஒரு கூட்டமாக நின்று கொண்டு சத்தமாக கத்தி ஒலியெழுப்பவும்.



சுக்கான் அறையின் மேல் அல்லது நன்கு தெரியக்கூடிய இடத்தில் நல்ல வண்ணமுடைய ஒரு துணையைப் பறக்கவிடவும்.


ஒரு சதுரமான கொடியின் மேலோ அல்லது கீழோ பந்து அல்லது பந்து மாதிரி ஒரு பொருள் இணைக்கப்பட்ட துணியை பறக்கவிடவும்.


சிவப்பு வண்ண சுடர்கள் கலனில் இருந்தால் சுடர்விட்டு எரியச்செய்யவும்.


கொடி மரத்தில் சார்லி கொடியுடன்
நவம்பர் கொடியை இணைத்து
பறக்கவிடவும்.


அணுகும் கலன்
கேட்கக்கூடிய தூரத்தில்
இருந்தால் தொடர்ந்து
உங்கள் ஊதியை ஊதவும்.



ஆரஞ்சு வண்ண
சமிக்ஞைகளை (smoke)
பயன்படுத்தவும்.

உங்களை நோக்கி பயணிக்கும் கலனின் கலனோட்டி
அறையை நோக்கி மின்கல ஒளிவிளக்கு அல்லது
வெள்ளை ஒளி விளக்கின் ஒளியை பாய்ச்சவும்.
● ● ● – – – ● ● ● (SOS) in the Morse code.



- பணிக்குழுவினர் கடல் நீரைக் குடிக்க எந்த நேரத்திலும் அனுமதிக்கக்கூடாது.
- உடலை கடற்காற்றுக்கோ அல்லது கடல் நீருக்கோ வெளிப்படுத்தக்கூடாது.
- சாராயத்தையோ அல்லது பறவைகளின் இரத்தத்தையோ குடிக்கக்கூடாது.
- புரதம் நிறைந்த உணவுகளை தவிர்க்கவும். இது உங்கள் உடலில் உள்ள நீர்ச்சத்தை குறைக்கும். கார்போ ஹைட்ரேட் மற்றும் குழுக்கோஸ் நிறைந்த உணவுகளை உண்ணவும்.
- வெப்பமண்டல பகுதிகளில் உயிர்வாழ ஒரு மனிதனுக்கு ஒரு நாளுக்கு ஒரு லிட்டர் குடிதண்ணீர் போதுமானது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- தூய்மையான கொள்கலனில் மழை நீரைச் சேகரித்து, எதிர்கால பயன்பாட்டுக்காக பாதுகாக்கவும்.
- புகைத்தல் உங்கள் உடலில் உள்ள நீர்ச்சத்தை போக்குவதால் புகைக்கக்கூடாது.
- ஒரு நம்பிக்கையற்ற சூழ்நிலையில், பசியுடன் போராட ஒரு துணியில் செய்யப்பட்ட புனலை பயன்படுத்தி மிதவை உயிரினங்களை சேகரிக்கலாம். நீங்கள் துணியாலான புனலை கடல் நீரில் கொஞ்ச நேரம் இழுத்து தண்ணீரை வடிப்பதன் மூலம் புனலின் வால் பகுதியில் மிதவை உயிரினங்கள் படிந்திருப்பதை காணலாம். ஒரு சட்டையின் கைப்பகுதியை இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தமுடியும். மிதவை உயிரினங்களை அல்லது கடற்பாசிகளை உண்பதால் உடலின் தண்ணீர் தேவை அதிகரிக்கிறது என்பதை நினைவில் வைக்கவும். மீன்களின் முதுகுத்தண்டு திரவம் தண்ணீரைக் கொண்டிருப்பதால், அவற்றை உறிஞ்சிக் குடித்து தாகத்தை தணிக்கலாம்.
- விரைவாக ஒரு மீட்பு பணியை எதிர்பார்க்காதீர்கள், அதற்கு நீண்ட நேரம் எடுக்கலாம், எனவே அமைதியாக இருங்கள்.
- மற்றொரு கலன் மக்களை மட்டுமே காப்பாற்றமுடியும் என்றால், முடங்கிப்போன கலனை மறந்து பணிக்குழுவினரை பாதுகாக்கவும்.

# உயிர்காப்பு மிதவைகளும், உயிர்காப்பு ஆடைகளும்

கலன்களில் உயிர்காப்பு சாதனங்களை வைத்திருக்கவேண்டியது அத்தியாவசியமாகின்றன. எடுத்துக்காட்டாக, கலனைக் கைவிடவேண்டிய ஒரு அவசரமான சூழ்நிலையில், இச்சாதனங்கள் உயிரை காப்பாற்றக்கூடும். ஒரு நபர் கணிசமான நேரம் தண்ணீரில் மிதந்த நிலையில் இருப்பதற்கு உயிர்காப்பு உடை உதவுகிறது. இருந்தபோதிலும் கடல் நீரில் நீண்டநேரம் மிதந்த நிலையில் இருத்தல் உடலில் நீரிழப்பு, உடல் சோர்வு ஏற்படவும் மற்றும் ஆபத்தான முறையில் குறைக்கப்பட்ட உடல் வெப்பநிலைக்கும் வழிவகுக்கிறது. ஆனாலும் மோசமான ஒரு சூழ்நிலையில், மீட்புப்படகு வரும் வரை ஒரு மனிதன் நீரில் மிதந்திருக்க உதவுகிறது.

பலவிதமான உயிர்காப்பு மிதவைகள் சந்தையில் கிடைக்கின்றன. ஒரு உயிர்காப்பு மிதவையானது கலனில் உள்ள அனைவருக்கும் இடவசதி கொண்டதாக இருக்கவேண்டும். ஆழ்கடலில் பணிக்குழு உறுப்பினர்கள் பல வாரங்களுக்கோ அல்லது அதற்கும் அதிகமான நாட்களுக்கோ பிழைத்திருக்க உதவுவதால் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. உயிர்காப்பு மிதவைகளில் பணிக்குழு உறுப்பினர்கள் நூறு நாட்களுக்கும் மேலாக உயிர் பிழைத்திருந்து, மீட்புப் படகுகளால் கண்டறியப்பட்டு, காப்பாற்றப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.





## ஒரு உயிர்காப்பு மிதவையானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்கவேண்டும்

- 30 மீட்டர் நீளத்துக்கு குறையாத மிதவை கயிற்றுடன் இணைக்கப்பட்ட ஒரு மிதவை வளையம்.
- சிறு கயிறு இணைக்கப்பட்ட மடிக்கமுடியாத, மிதக்கக்கூடிய கைபிடியுடன் பாதுகாப்பு கத்தி ஒன்று உயிர்காப்பு மிதவையின் விதானத்துக்கு வெளிப்புறமாக, பெயின்டர் இணைக்கப்பட்ட இடத்தில் ஒரு பையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. கூடுதலாக மடிக்கக்கூடிய கத்தி ஒன்றும் உயிர்காப்பு மிதவைக்கு கொடுக்கப்படவேண்டும்.
- 12 நபர்களுக்கும் அல்லது அதற்கு குறைவானவர்களுக்கும் இடமளிக்க அனுமதிக்கப்பட்ட ஒரு உயிர்காப்பு மிதவைக்கு, தண்ணீர் அகற்றும் மிதவை வாளி ஒன்று தேவைப்படும். 13 நபர்களுக்கும் மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கும் இடமளிக்க அனுமதிக்கப்பட்ட உயிர்காப்பு மிதவைக்கு இரண்டு மிதவை வாளிகள் நீரை அகற்றத் தேவைப்படும்.
- இரண்டு நீர் உறிஞ்சிகள்.
- ஒவ்வொன்றும் அதிர்வை தாங்கக்கூடிய, நங்கூரம் பாய்ச்ச உதவும் பலமான கயிற்றாலும், தானாக விடுபடக்கூடிய கயிற்றாலும் இணைக்கப்பட்ட தரமான இரண்டு கடல் நங்கூரங்கள். ஒரு கயிறு நிரந்தரமாக உயிர்காப்பு மிதவையுடன் இணைக்கப்பட்டும், மற்றொன்று இணைக்கப்படாமலும் இருக்கவேண்டும். இவை மீதவை நீரில் விடப்படும் போதும் அல்லது தானாகவே காற்றை ஊதி மிதவை வடிவத்தை அடையும்போது காற்றின் திசைக்கேற்ப மிதவையை நிலைநிறுத்திக்கொள்ள உதவும். கடல் நங்கூரம், கலனை கட்டும் கயிறு மற்றும் தானாக விலகும் கயிறு ஆகியவை எல்லா கடல் நிலைமைகளுக்கும் ஏற்றவாறு பலம் பொருந்தியதாக இருக்கவேண்டும். கடல் நங்கூர கயிற்றின் இரு முனைகளிலும் சுழல் தடுப்பு கருவிகள் பொருத்தப்பட்டு இருத்தல் வேண்டும். இது கடல் நங்கூரத்தின் உட்பகுதி மிதக்காமல் இருக்க உதவும்.
- இரண்டு மிதவை துடுப்புக்கள்.
- மூன்று டின் திறப்பான்கள். சிறப்பு டின் திறப்பான் தகடுகள் கொண்ட பாதுகாப்பு கத்திகள் இந்த தேவைக்கு போதுமானவை.
- திறந்த பின் இறுக மூடக்கூடிய நீர்க்கசிவற்ற தரமான முதலுதவி பெட்டி.
- ஒரு ஊதி அல்லது அதற்கு சமமாக ஒலியெழுப்பக்கூடிய ஒலி சமிக்ஞை.
- தேவைக்கிணங்க நான்கு பாராசூட் ஒளிச்சுடர்கள்.
- தேவைக்கிணங்க ஆறு கையெறி சுடர்கள்.
- தேவைக்கிணங்க இரண்டு புகை சமிக்ஞைகள்.
- நீர்க்கசியா பெட்டியினுள்ளே வைக்கப்பட்ட அங்கீகாரம் பெற்ற தரமான மோர்ஸ் குறியீட்டு சமிக்ஞைக்கு பயன்படக்கூடிய மின்கல விளக்கு, உதிரி மின்கலங்கள் மற்றும் ஒரு உதிரி மின்குமிழ்.

- ஒரு தரமான, ரேடார் பிரதிபலிப்பான்.
- கப்பலுக்கும், வானூர்திக்கும் சமிக்ஞையளிக்க பயன்படக்கூடிய, அங்கீகரிக்கப்பட்ட சூரிய ஒளியை பிரதிபலிக்கும் தளவாடியும், அதனுடன் உபயோகிக்கும் முறைமை பற்றிய தகவல்கள்.
- நீர்க்கசிவற்ற மட்டையினுள் அல்லது பெட்டியினுள் வைக்கப்பட்ட உயிர்காப்பு குறியீடுகளின் நகல்.
- மீன்பிடி தளவாடங்களின் ஒரு தொகுப்பு.
- உயிர்காப்பு மிதவையின் கொள்ளளவுக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் 10 000 கிலோ யூல்ஸ்க்கு (2390 கலோரி) குறையாமல் அங்கீகரிக்கப்பட்ட உணவு பண்டங்கள்; இந்த உணவு பண்டங்கள் காற்று புகாதவாறு பொதியப்பட்டு, நீர்க்கசியா கொள்கலனில் அடைத்து வைத்திருக்கப்படவேண்டும்.




- உயிர்காப்பு மிதவையின் கொள்ளளவுக்கேற்ப, ஒவ்வொரு நபருக்கும் 1.5 லிட்டருக்கும் குறையாத குடிதண்ணீர் நீர்கசிவற்ற பாத்திரத்தில் வைத்திருக்கப்படவேண்டும். இதில் ஒவ்வொருவருக்கும் 0.5 லிட்டர் அளவு வீதம் இரண்டு நாட்களில் கடல் நீரில் இருந்து குடிநீர் உற்பத்தி செய்யக்கூடிய, அங்கீகரிக்கப்பட்ட உபகரணத்தை வைத்திருத்தல் வேண்டும்.
- ஒரு துருப்பிடிக்காத, அளவுகள் குறிக்கப்பட்ட குடிநீர் பாத்திரம்.
- ஒரு நீர்க்குவளை.
- உயிர்காப்பு மிதவையின் கொள்ளளவுக்கேற்ப, ஒவ்வொரு நபருக்கும் ஆறு வேளைக்கு போதுமான கடல் நோய் எதிர்ப்பு மருந்து, ஒவ்வொருவருக்கும் ஒரு கடல் நோய் பை.
- கடலில் பிழைத்திருப்பது எப்படி என்பது பற்றிய அறிவுரைகள்.
- உடனடி நடவடிக்கைக்கான அறிவுரைகள்.
- குறைந்தது இரண்டு நபர்களுக்கான வெப்ப பாதுகாப்பு உறைகள்.

# மாற்று உயிர்பாதுகாப்பு மிதவைகள்





ஒரு உயிர்காப்பு மிதவை இல்லையென்றால் வலையின் மிதவைகளினால் செய்யப்பட்ட ஒரு உயிர்காப்பு வார் பட்டி *

சுயமாக காற்றை உள்ளிழுத்து மிதவை வடிவத்தை அடையும் உயிர்காப்பு மிதவைக்கு மாற்றாக பெரிய படகுகளுக்காக கண்ணாடி நாரிழையால் வலுவூட்டப்பட்ட நெகிழி உயிர்காப்பு மிதவை*






உயிர்காப்பு மிதவை / சிறுதர மீன்வளங்களின் கடல் பாதுகாப்பை முன்னேற்றும் / வவிகுதி.அஇஅ

கடலில் பாதுகாப்பு பற்றிய மேற்கண்ட வீடியோவை பார்க்க:
https://www.youtube.com/watch?v=rzkkgAS2VAQ



* பங்களாதேஷ் காக்ஸ் பஜாரில், கடலோர மீன்பிடி சமுகங்களின் வாழ்வாதார பாதுகாப்புக்கு அதிகாரமளித்தல் பற்றிய பங்களாதேஷ் அரசு/ யுஎன்டிபி திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது.

* இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் புயல்காற்றின் போது உயிரிழப்பைக் குறைக்கும் நடவடிக்கைகள் குறித்த உவேஅ தொழில்நுட்ப ஒத்துழைப்பு திட்டத்தினால் உருவாக்கப்பட்டது.

# குளிரால் ஏற்படக்கூடிய தீங்குகள்

குளிர்ந்த நீருக்கு ஆட்படுவதன் விளைவாக உடல் குளிர்ச்சியடைவது கடலில் அடிக்கடி இறப்பு ஏற்படுவதற்கு காரணமாகிறது. கடலில் மூழ்கி இறப்பதை காட்டிலும் குளிரால் இறப்பது அதிகமாகும் என்று கப்பல் பேரழிவுகள் பற்றிய ஆய்வுகளின்படி தெரியவந்துள்ளன.

குளிரில் இருந்து உங்களை பாதுகாத்து கொள்வது எப்படி மற்றும் குளிரால் பாதிக்கப்பட்டவருக்கு சிகிச்சை அளிப்பது எப்படி என்பதை அறிந்திருப்பது முக்கியமாகும். குளிர் காரணமாக ஒரு நபர் இயங்கும் ஆற்றலை இழக்க நேரிடலாம், அதன் விளைவாக அவன்/அவள் தண்ணீரில் மூழ்கக்கூடும். ஒரு மனித உடலின் சராசரி வெப்பநிலை 37 டிகிரி சென்டிகிரேட் ஆகும். ஒரு மனிதனின் உடல் வெப்பநிலை 40 – 41 டிகிரி சென்டிகிரேட்டுக்கு உயரும்போது அவன் குளிர்சுரத்துக்கு ஆளாகிறான். உடல் வெப்பநிலை 33 டிகிரி அல்லது அதற்கும் குறைவானால், அவன் மயக்கநிலையை அடைகிறான். 25 டிகிரி சென்டிகிரேட்டுக்கு கீழ் இதயம் வேலை செய்யாது என்பதால் சுமார் 25 டிகிரி சென்டிகிரேட்டில் இறப்பு ஏற்படுகிறது.

ஒரு நபர் குளிர்ந்த நீருக்குள் விழும்போது, தண்ணீர் உடனடியாக துணிகளை ஊடுருவி செல்லும். துணிகளில் உள்ள காற்றை நீர் அகற்றுவதால், தோல் கடுமையான குளிரின் தாக்கத்துக்கு ஆளாகும். தண்ணீரின் வெப்பநிலை 30 டிகிரி சென்டிகிரேட்டை விட குறைவாக இருந்தால் உடலின் வெப்பத்தை பாதுகாக்கும் முயற்சியில் தோலில் உள்ள இரத்தக் குழாய்கள் சுருங்கும், இருப்பினும், இந்த செயல்பாடு பாதிக்கப்பட்டவரின் உடல் வெப்பநிலையை நீண்ட நேரம் பாதுகாக்க உதவாது.

உடல் தசைகளை இறுக்குவதன் மூலம் அதிக வெப்பத்தை உருவாக்க முயற்சிக்கும், இந்த செயலின் விளைவாக நடுக்கம் ஏற்படும். வெப்பநிலை தொடர்ந்து வீழ்ச்சியடைந்தால் நடுக்கம் குறைகிறது மற்றும் அவர் இத்தகைய தீவிரமான அளவுக்கு குளிரின் தாக்கத்தை உணரமாட்டார், ஆனால் மெதுவாக மயக்க நிலைக்கு சென்று விடுவார்.

ஒரு பணிக்குழு உறுப்பினர் கலனில் இருந்து குளிர்ந்த நீருக்குள் விழுந்து விட்டால், அவரது கை கால்கள் ஓரளவு உறைந்து போய்விடும், மேலும் அந்த நபர் பக்கவாதத்தை அனுபவிக்கக்கூடும். மீட்புக்காக ஏதாவது ஒரு கயிற்றை அவனை/அவளை நோக்கி வீசினால், அந்த கயிற்றை பிடித்துக்கொள்ளவோ அல்லது புரிந்துகொள்ளவோ இயலாமல் போய்விடலாம்.

நீங்கள் குளிர்ந்த நீருக்குள் வீழ்ந்து விட்டால், உயிர் பிழைக்க பின்வருவனவற்றை செய்யலாம்:

- உங்கள் உடலின் பல பகுதிகளை தண்ணீருக்கு வெளியே வைத்திருக்க முயற்சிக்கவும். அதிவேகமாக காற்று வீசும்போதுகூட தண்ணீர் காற்றை விட தண்ணீர் 5 – 6 மடங்கு குளிர்விக்கிறது என்பதை தயவு செய்து நினைவில் கொள்ளுங்கள்.



- நீங்கள் பயம் கொள்ளக்கூடாது. உங்கள் சுவாசத்தை கட்டுப்படுத்த முயற்சிக்கவும், மீட்பாளர்களின் கவனத்தை கவர மட்டும் சத்தமிடவும் அல்லது சமிக்ஞைகளை செய்யவும்.
- நீங்கள் உயிர்காப்பு உடையை அணியவில்லை என்றால், பின்னர் பிடித்துக்கொள்ளவோ அல்லது ஏறி அமர்ந்து கொள்ளவோ உங்களை சுற்றி ஏதாவது மிதக்கிறதா என்பதை பார்க்கவும்.
- நீங்கள் ஒரு உயிர்காப்பு உடை அணிந்திருந்தால், வெப்பயிழப்பைக் குறைக்க முடிந்தவரை, அசைவில்லாமல் இருக்கும் ஒரு நிலையை எடுக்கவும், உங்கள் தலை மற்றும் கழுத்தை தண்ணீருக்கு வெளியே வைத்திருக்கவும்.
  - நீங்கள் நீந்தவேண்டியிருந்தால் ஆற்றலை பாதுகாக்கவும், அசைவை குறைக்கவும் முயற்சிக்கவும்.
  - நீங்கள் தண்ணீரில் அதிகமானவர்களுடன் இருந்தால் ஒன்றாக இருக்க முயற்சிக்கவும்.

## வெப்பக்குறைவு (Hypothermia)

உடலின் உள் வெப்பநிலையில் குறைவு கைபோதேர்மியா எனப்படும். குளிர்ந்த நீரில் மூழ்கியதாலோ அல்லது குளிர்ந்த வானிலையில், ஈரமான காற்று சூழ்நிலைகளில் இருந்தபோது போதிய உடையணியாமல் அல்லது உடலை மூடி வைக்காமல் இருந்ததன் விளைவாக தொடர் வெப்பக்குறைவில் இருந்து இந்நோய் ஏற்படுகிறது. உயிர் பிழைத்திருக்கும் அனைவரும், குறிப்பாக ஒரு திறந்த கலனில் உள்ளவர்களுக்கு இந்த நோய் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. உயிர் பிழைத்திருக்கும் அனைவரும் கைபோதெர்மியா ஒரு உயிர்கொல்லி நோய் என்பதை அறிந்திருக்கவேண்டும். இதன் ஆரம்ப தாக்கம் விரைவாக இருக்கலாம், இந்நோயால் பாதிக்கப்பட்டவரோ அல்லது பிழைத்திருக்கும் மற்றவர்களோ உணர்ந்து கொள்ளவில்லை என்றால், ஒரு மணி நேரத்திற்குள் மரணத்தைத் தழுவ வாய்ப்புள்ளது. கைபோதேர்மியாவினால் பாதிக்கப்பட்ட ஒருவர் பெரும்பாலும் தன் நிலையை உணரமாட்டார், எனவே நீங்கள் கைபோதெர்மியாவின் அறிகுறிகளை அறிந்துகொள்ளுவது முக்கியமாகும்.

வெப்பக்குறைவு/கைபோதேர்மியாவை பின்வருபவை மூலம் அடையாளம் காணமுடியும்:

- அதிக வெப்பத்தை உருவாக்கும் வகையில் உடலில் நடுக்கம் ஏற்படுதல்.
- உடல் நலமின்மை, களைப்பு, தொடர்பற்ற செயல்பாடுகள், உணர்வின்மை, நா குளறல், தன்னிலையிழத்தல் மற்றும் மனக்குழப்பம்.
- தொடுகை உணர்வு குறைவடைதல், பேச்சு குளறல் மற்றும் உதடுகள், கை கால்கள் வீங்கி இருக்கலாம்.

கைபோதேர்மியாவுக்கு சிகிச்சையளிக்க பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்:

- ஆவியாதல் அல்லது உடலை வெளிப்படுத்துதல் காரணமாக மேலும் ஏற்படும் வெப்பக்குறைவை தடுத்தல். ஈரமான, காற்றுச் சூழ்நிலைகளில் இருந்து பாதிக்கப்பட்டவருக்கு பாதுகாப்பு வழங்க உடலை மூடி போர்த்துதல்.
- நெருப்பு போன்ற, வெளிப்புற வெப்பத்துக்கு நெருக்கமாக பாதிக்கப்பட்டவரை கிடத்துதல்.

- வெது வெதுப்புக்காக பாதிக்கப்பட்டவரை மற்றவர்களுக்கு நடுவில் இருக்க வைத்தல். போர்வைகளுக்கு அடியில் எல்லோரையும் நெருக்கமாக ஒரே கூட்டமாக இருக்கச்செய்வது பாதிக்கப்பட்டவரின் உடலுக்கு போதுமான வெப்பத்தை விரைவாக கொடுக்க ஒரு வழியாகும்.
- பாதிக்கப்பட்டவரை அணைத்தல், தொடுதல் போன்ற தேவையற்ற உடல் ரீதியான தொடர்பை தவிர்க்கவும்.
- பாதிக்கப்பட்டவர் நினைவுடன் இருக்கும்போது, அவருக்கு சூடான, இனிப்பான பானங்களை கொடுக்கவும்.
- காற்றின் வெப்பம் தண்ணீரின் வெப்பத்தை விட குறைவாக இருந்தால் ஒழிய அல்லது போர்வைகள் முன்னரே சூடுபடுத்தப்பட்டு இருந்தால் ஒழிய ஒரு போர்வையினால் போர்த்தி மூடக்கூடாது. (சூடுபடுத்தப்படாத போர்வைகள் வெளிப்புற வெப்ப ஆதாரங்களில் இருந்து உடலின் மேற்பரப்பு குளிரை பாதுகாக்கின்றன).
- உடல் மற்றும் கை கால்களை பிடித்து உருவி, வருடி, அழுந்த தேய்த்து விடக்கூடாது.
- பிழைத்திருப்பவர் நினைவற்ற நிலையில் இருந்தால், அவருக்கு திட, திரவ உணவுகளை கொடுக்கக்கூடாது.
- மது அருந்த கொடுக்கக்கூடாது.

# குளிரால் பாதங்கள் விரைப்படைதல்

நீண்டநேரம் தொடர்ந்து குளிர்ந்த நீரில் கால்கள் உள்ளபோது குளிரால் விறைத்த பாதங்கள் ஏற்படலாம். கால் குளிர்ச்சியாகவும், ஈரமாகவும் மாறுகிறது, இதன் விளைவாக இரத்த சுற்றோட்டம் குறைகிறது. பாதிக்கப்பட்ட பகுதி வீங்கி, உணர்வற்றுபோய், மிகுந்த வலியைக் கொடுக்கலாம். பின்னர் தோலின் நிறம் மாறலாம் அல்லது வெடித்து போகலாம்.

குளிரால் விறைத்த பாதங்களின் சிகிச்சை பின்வருமாறு:

- பாதிக்கப்பட்டவரை வெதுவெதுப்பாக வைத்திருங்கள் மற்றும் உடலின் பாதிக்கப்பட்ட பகுதியை உயர்த்தி வைத்திருப்பதை உறுதிசெய்யுங்கள்.
- முதலில் பாதிக்கப்பட்டவரின் உடலை சூடாக்குங்கள், பின்னர் காலை சூடாக்குங்கள் ஆனால் காலை பிடித்து உருவி, வருடி அழுந்த தேய்த்தல் கூடாது.
- புண்களோ அல்லது கொப்பளங்களோ ஏற்பட்டால், தூய்மையான துணிகளை கொண்டு மூடி கட்டு கட்டவும்.
- காலணிகளையும், சப்பாத்துக்களையும் (socks) நீக்குங்கள், பாதத்தையும் கால்களையும் உலர்த்தவும் மற்றும் முழங்கால்களை முன்னும் பின்னுமாக நீட்டி மடக்கி இயக்கங்களை மேற்கொள்ளவும்.
- உலர்ந்த துணிகளில் காலை வைத்தோ அல்லது பிழைத்திருக்கும் மற்றவர்கள் மடியில் வைத்தோ காலை சூடாக்கவும்.

## சூரிய ஒளியால் தோல் கருகுதல்

கலனின் பாதுகாப்பான வழிச்செலுத்தலுக்காக, சுக்கான் அறைக்கு வெளியில் நின்று கடலை ஆபத்துக்காக உற்று நோக்குதல் போன்ற, வெளிப்புறம் கடமையாற்ற வேண்டிய பணிக்குழ உறுப்பினர்கள் சூரியனின் வெப்பத்தால் தோல் கருகி விடாமல் பாதுகாக்கும் வகையில் தங்கள் உடலை முடிந்தவரை போர்த்திக்கொள்ள கவனம் எடுக்கவேண்டும்.

சூரிய ஒளியால் தோல் கருகி இருப்பதை ஒரு வீச்சுக் குறைந்த தீக்காயமாக கருதி சிகிச்சையளிக்க வேண்டும். கொப்பளங்களை குத்தி அதில் உள்ள திரவத்தை வெளியேற்றாமல், அவற்றுக்கு தொற்று நீக்கி களிம்புகளை தடவி, துணியால் சுற்றி மூடவேண்டும்.

## கண்களின் பாதுகாப்பு

நீண்டநேரம் தளத்தில் செலவிடும் பணிக்குழு உறுப்பினர்கள் இருண்ட கண் கண்ணாடிகளை அணிந்து தங்கள் கண்களை பாதுகாக்கவேண்டும். சூரிய ஒளியானது தண்ணீரின் மேற்பரப்பைத் தாக்கும்போது, அதிக வீரியத்துடன் அது மீண்டும் பிரதிபலிக்கப்படுகிறது. கண்களை கூசச்செய்யும் வடிவில் சூரிய ஒளியானது உங்கள் கண்களுக்கு தீங்கு விளைவிக்கலாம். மீன்பிடிக்கும்போது துருவப்படுத்தப்பட்ட ஆடிகள் சிறந்த பாதுகாப்பு வழங்கும், ஏனெனில், அவை சூரிய ஒளி கண்களை கூசச்செய்வதை தடுத்துவிடுகின்றன, இது கண்களின் சிரமத்தையும் தேவையற்ற பிரச்சினைகளையும் தடுக்க உதவுகிறது.

## உப்பு நீரினால் உடல் எரிந்து போதலும் இரணமாதலும்

இந்நிகழ்வு உயிர் பிழைத்திருப்பவர் உயிர்காப்பு மிதவை அல்லது உயிர்காப்பு கலனில் உப்பு நீரில் அமர்ந்திருக்கும்போது, பிழைத்திருப்பவரின் கால்களில் உப்பு நீர் கோர்ப்பதனால் ஏற்பட வாய்ப்புள்ளது. உப்பு நீரில் ஊறிய தோலில் ஏற்படும் சிறு வெடிப்புக்கள் மற்றும் உராய்வுகள் நோய்த் தொற்று எதிர்ப்பை இழந்து விடுகின்றன.

கொப்பளங்களையும், இரணங்களையும் அமுக்கி பிதுக்காமல், அவற்றின் மீது தொற்று நீக்கி களிம்புகளைத் தடவி, தூய துணிகளால் சுற்றிக்கட்டி குணப்படுத்தவும். ஒரு உயிர்காப்பு மிதவையில் அல்லது கலனில் பல நாட்கள் இருப்பதால் அமரும் இடங்களில் தேய்வு இரணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளன.

## உடலியக்கங்கள்

பிழைத்திருப்பவர்கள் அனைவரையும் சிறுநீர் பையில் சிறுநீர் இல்லாமல் இருக்கும் வகையில் அடிக்கடி சிறுநீர் கழிக்கும்படி அறிவுறுத்தவேண்டும். இல்லாவிடில், சிறுநீரகங்கள் தொடர்ந்து சிறுநீரை உற்பத்தி செய்வதால் கடுமையான விளைவுகள் ஏற்படலாம். பொதுவாக இரத்தச் சுற்றோட்டத்திற்குள் சிறுநீரில் இருந்து நீரை பெற்றுக்கொள்ள முடியாது என்பதால் சிறுநீரை சீறுநீர் பையில் தேக்கி வைப்பதில் எவ்வித பயனுமில்லை.

உயிர் பிழைத்தவர்களுக்கு முதலிரண்டு நாட்களுக்கு பின்னர் மலச்சிக்கல் ஏற்பட்டால், கவலைப்படத் தேவையில்லை. ஒரு உயிர்காப்பு மிதவையில் கட்டுப்பாடு உணவில் செரிமானம் ஆகாத உணவின் எச்சங்கள் மிகக்குறைந்த அளவே உண்டு.

# உடலில் நீரிழப்பு ஏற்படுதல்

மனித உடலில் சுமார் 40 லிட்டர் தண்ணீர் உள்ளது, இதில் உத்தேசமாக 25 லிட்டர் தண்ணீர் ஆயுளை பராமரிக்கத் தேவைப்படுகிறது. ஆகாரமோ அல்லது தண்ணீரோ உட்கொள்ளாமல் ஓய்வில் இருக்கும் ஒரு நபரால் இழக்கப்படும் நீரின் இயல்பான அளவு நாள் ஒன்றுக்கு சுமார் ஒரு லிட்டராகும். எனவே, ஒரு நபர் கூடுதல் நீரிழப்பு இல்லையென்றால், சுமார் இரு வாரங்களுக்கு தண்ணீர் பருகாமல் உயிர்வாழமுடியும்.

அதிக உழைப்பு, வியர்வை, வாந்தியெடுத்தல், வயிற்றோட்டம், சிறுநீரை குடித்தல், கடல் நீரை குடித்தல், மீன்களை உண்ணுதல் அல்லது இரத்தத்தை உறிஞ்சி குடித்தல் போன்றவற்றால் அதிகரித்த நீரிழப்பு ஏற்படலாம். முடிந்தவரை உழைப்பைத் தவிர்க்கவேண்டும். குறிப்பாக, வெப்பமண்டல பகுதிகளில், முடிந்தவரை வியர்வையை குறைக்கவேண்டும். வாந்தி உடலில் உள்ள நீரின் அளவை குறைப்பதால், கடல் நோய் எதிர்ப்பு மாத்திரைகளை எடுத்துக்கொண்டு, வாந்தியெடுப்பதை தவிர்க்கவேண்டும்.

சிறுநீரில் உள்ள நீரில் நச்சு கழிவுகள் கரைந்துள்ளன. இந்த கழிவு பொருட்களால் உடலுக்கு எவ்வித பயனும் இல்லை. **சூழ்நிலையின் நம்பிக்கையற்ற தன்மையைப் பொருட்படுத்தாமல் சிறுநீரை குடிக்கக்கூடாது.**

உயிர் பிழைத்திருப்பவர்கள் நீரிழப்பு அதிகரிப்பதால் **கடல் நீரை ஒருபோதும் குடிக்கக்கூடாது.** இது நுகர்வுக்கு பிறகும் தொடர்கிறது.

உயிர் பிழைத்திருப்பவர்கள் **உலர்ந்துபோன, வெடித்துப்போன உதடுகளை ஈரப்படுத்த கடல் நீரை பயன்படுத்தக்கூடாது.**

# சித்தபிரமையும் மனக்குழப்பமும்

கடல் நீரை குடிப்பதால் சித்தபிரமை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு. சித்தபிரமை பிடித்தவர்கட்கு மாயத்தோற்றங்கள் ஏற்படக்கூடும், சில நேரங்களில் தண்ணீருக்குள் குதிக்க முயற்சிக்கலாம். சித்தபிரமை பிடித்த ஒருவருக்கு விளக்கம் சொல்லி புரியவைக்க முடியாது. அடக்கி வைக்கவேண்டிய நிலை ஏற்படலாம். அதிகக் களைப்பு மற்றும் காயங்களால் பாதிக்கப்பட்ட உயிர் தப்பியவர்கள், யோசனை இல்லாதவர்களாகவும், காரணமின்றி காரியமாற்றுபவர்களாகவும் மாறிவிடுவர். முடிந்தவரை அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க முயற்சிக்கவேண்டும். ஆனால் திடீரென்று ஏதாவது தேவையற்ற செயல்களில் இடுபடாமல் பார்த்து கொள்ளவேண்டும்.

# சுகாதாரம்

உயிர் பிழைத்தவர்கள் தங்கள் உடலையும் வாயையும் சுத்தமாக வைத்திருக்கும்படி வலியுறுத்த வேண்டும். உடலில் படிந்த உப்பாலும், அழுக்காலும் மற்றும் உப்பு படிந்த உடைகளின் உராய்வினாலும் தோலில் நோய் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. வெயில் சாதகமாக இருந்தால் மழைக்கு உடலை வெளிப்படுத்துவதும், குளிப்பதும் மற்றும் சற்று நேரம் சூரிய ஒளியிலும், சுத்தமான காற்றிலும் நிற்பதும் நன்மை பயப்பதாகும். குளிப்பதாக இருந்தால், உயிர் பிழைத்தவர்களை உயிர்காப்பு மிதவையுடன் உயிர்காப்பு கயிற்றால் இணைக்கவேண்டும், நீந்துவதன் மூலம் ஆற்றலை வீணாக்கக்கூடாது. எப்போதும் வேட்டையாடும் மீன்கள் மீது ஒரு பார்வை இருக்கவேண்டும்.

உயிர் பிழைத்தவர்களின் உதடுகளும், நாக்குகளும் வீக்கமடைந்து, கட்டுபாடான ஆகாரத்தாலும், உமிழ்நீர் சுரப்புக் குறைவினாலும் உதடுகள் வெடித்திருக்கும். வாயின் உட்புறம் வறண்டுபோய், கசப்பு தன்மையுடன் இருக்க வாய்ப்புள்ளது.

# முடிவுரைகள்



# செய்யக்கூடியவைகளும் செய்யக்கூடாதவைகளும் (சரிபார்ப்புகளும் நடைமுறைகளும்)

## செய்யக்கூடியவைகள்

1. உங்களது கடற்பயணத் திட்டத்தை துறைமுக அதிகாரிகளிடம் அவர்களின் பதிவுக்கு கொடுக்கவும். இந்த பயணத் திட்டமானது பணிக்குழு உறுப்பினர்களின் பெயர்கள், முகவரிகள், படகு உரிமையாளரின் பெயர், தகவல் தொடர்பு கொள்ளுவதற்கான விவரங்கள், படகின் பெயர், பதிவு செய்யப்பட்ட பதிவு எண், மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கும் கடற்பகுதி, எதிர்பார்க்கப்படும் கரை திரும்பும் நாள், படகில் இருக்கும் தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் விவரங்களை கொண்டிருக்கவேண்டும்.
2. எப்போதும் வானிலை முன்னறிவிப்பைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருங்கள் மற்றும் மோசமான வானிலைக்கு விழிப்புடன் இருந்து செயல்படுங்கள்.
3. தீயணைப்பு கருவிகள், உயிர்காப்பு உடைகள், உயிர்காப்பு வளையங்கள், உயிர்காப்பு மிதவைகள், தீயணைப்பு எக்கிகள், குழாய்கள், சுடர்கள் மற்றும் சமிக்ஞைகள் முதலிய உங்கள் பாதுகாப்பு சாதனங்கள் நல்ல நிலையில் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.
4. தீயணைப்பு, கடலில் உயிர் பிழைத்திருத்தல் மற்றும் முதலுதவி ஆகியவற்றில் அனைத்து உறுப்பினர்களுக்கும் அடிப்படையான அறிவு அவசியமானது.
5. போதிய அளவு எரிபொருள், குடிதண்ணீர், உணவுப் பொருட்கள், முதலுதவி வசதிகள் முதலியன உங்களிடம் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
6. எஞ்சின் கருவிகள் ஆகியவற்றின் பழுதை நிவர்த்தி செய்யத் தேவையான உதிரி பாகங்கள், உராய்வு நீக்கிகள், கருவிகள் முதலியன கலனில் இருக்கவேண்டும்.
7. உங்கள் கலனில் தொலைத்தொடர்பு கருவிகளோ அல்லது விஎச்எப் ரேடியோ மற்றும் எக்கோ சவுண்டர் போன்ற கருவிகளோ இருந்தால், அவை நன்கு செயல்படுகின்றனவா என்பதை சரிபார்க்கவும்.
8. மின்கலங்கள், மின்சக்தி அளிக்கும் கருவிகளின் நிலையைச் சரிபார்க்கவும்.
9. காந்தப்புலன் **(Compass)** திசையறி கருவியை அவற்றின் விலகலுக்கும், மாறுதலுக்குமான சோதனைக்கு உட்படுத்தவேண்டும். ஒரு பதிவேட்டில் கலன் பயணப்பாதையைக் குறிக்கவும்.
10. கலன் பயணத்திற்கான நேரத்தையும், வேகத்தையும் கணக்கிடும் போது நிலவுகின்ற காற்று, எதிர்பார்க்கப்படும் காற்றுகளையும், நீரோட்டங்கள் ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவும்.
11. பிரதான கடற்பயண பாதைகள், தடைசெய்யப்பட்ட பகுதிகள், பக்கத்து நாடுகளின் தனிப்பட்ட பொருளாதார மண்டலங்கள் முதலியவை குறிக்கப்பட்ட வரைபடங்கள் கலனில் இருக்கவேண்டும்.



12. கடற்பயணத்தின்போது பிரச்சினைகளை எதிர்நோக்காத வகையில், இயந்திரங்களும் தளவாடங்களும் நல்ல நிலையில் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

13. கலன் வெளிப்புறத்தில் ஏதாவது வெடிப்புகளும் சேதங்களும் உள்ளனவா என்றும், உட்புறத்தில் நீர்க்கசிவுகள் இருக்கின்றனவா என்றும் பார்த்து, அப்படி ஏதாவது இருந்தால் அதை சரிசெய்து கொள்ளுங்கள்.

14. கலனையும், கலன் குழுவினரையும் அடையாளப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான அடையாள ஆவணங்கள் உள்ளனவா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

15. குழு உறுப்பினர்களின் மன அழுத்தத்தை தவிர்க்கும் வகையில், நீண்டநாட்கள் கடற்பயணம் மேற்கொள்கையில், வேலை நேர அட்டவணையை தயாரித்து, அதனை செய்முறைபடுத்துங்கள்.

16. எப்போதும் பிற கலன்களுடன் ஒன்றாக அல்லது மற்ற கலன்களின் பார்வைக்கு எட்டும் பகுதிக்குள் இருக்க முயற்சி செய்யுங்கள். இது உங்களுக்கு அவசர உதவி தேவைப்பட்டால் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

17. ஏற்கனவே கடலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள கலன்களை பற்றியும், கரை திரும்பும் கலன்களை பற்றியும், விசாரித்து அறிந்துகொள்ளுங்கள். அவர்கள் நகர்வுகளை கண்காணித்திடுங்கள். இது மீன்பிடிப்பு மற்றும் வானிலை பற்றி ஓரளவுக்கு நீங்கள் கணிப்பதற்கும், அவசரமாக உதவிகளை பெற்றுக்கொள்ளவும் உதவும்.

18. எப்போதும் நீங்கள் நிலைகொண்டுள்ள இடத்தை கடல் வரைபடத்தில் குறித்துக் கொள்ளவும். ஆழ்கடலில் இருக்கும்போது ஒரு மணி நேரத்துக்கு ஒருமுறையும், கரைக்குச் செல்லும்போது 30 நிமிடத்துக்கு ஒருமுறையும் கடல் வரைபடத்தில் தகவல்களை குறிக்கவும்.

19. ஒரு நாளைக்கு இருமுறை கரையில் உள்ள வானொலி நிலையத்தை தொடர்பு கொண்டு, அவர்களுக்கு உங்கள் நிலைபாட்டை தெரிவிக்கவும். அவர்களிடம் வானிலை பற்றிய தகவல்களை கேட்டு சேகரித்து கொள்ளவும்.



20. உதவிக்காக விரைவாக அழைக்கவும், வேறு ஏதாவது கலன்களுக்கு உங்கள் உதவி தேவைப்பட்டால், உங்களை அழைக்கவும் உங்கள் வானொலி எப்போதும் அலைவரிசை 16 ஐ (மற்றும் 70 அது டிசிஎஸ் கொண்டிருந்தால்) என்பதை உறுதிசெய்யுங்கள்.

21. உங்களை நோக்கி நேருக்குநேராக வரும் கலன் பற்றியும், உங்கள் கலனுக்கு முன்னால் குறுக்காக செல்லும் கலன் பற்றியும் எப்பொழுதும் கவனமாக இருங்கள். சரியான நேரத்தில் மோதலை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திடுங்கள்.

22. எப்போதும் காற்று வீசும் திசையில் உங்கள் வலைகளையும், தூண்டில் கயிறுகளையும் கடலில் வீசவும், காற்றும் வீசும் திசைக்கு எதிர் திசையில் வலைகளையும், தூண்டில் கயிறுகளையும் கலனுக்குள் இழுக்கவும் முயற்சி செய்யுங்கள். இது கலனுக்கு பின்னால் வலைகளையும் தூண்டில்களையும் வைக்கவும், கடலோட்டத்துடன் சேர்ந்து இவைகள் கலனோடு சிக்கிக் கொள்ளாமல் தவிர்க்கவும் உதவும்.

## செய்யக்கூடாதவைகள்

1. உலோக பொருட்களை காந்தப்புல திசையறி கருவிக்கு அருகில் வைக்கக்கூடாது. இது திசையறி கருவி அட்டையில் கூடுதல் மாறுதலை ஏற்படுத்த வழிவகுக்கிறது, இதனால் உங்கள் பணயத் திசையின் போக்கில் கணிசமான பிழைகள் ஏற்படும்.

2. பிற கலன்களில் இருந்து வரும் தகவல்களை பெறுவதற்காக இயன்றவரை தொலைதொடர்பு கருவியை தயாராக வைத்திருக்கவும். இதை கட்டாயம் செயல்முறைபடுத்தப்படவேண்டும். குழு உறுப்பினர்கள் பிற கலன்களில் வரும் தகவல்களின் முக்கியத்துவத்தை அறிந்துள்ளனர் என்பதை உறுதிசெய்யவும்.

3. கடலில் மிதந்து வரும் அடையாளம் தெரியாத பொருட்களைத் தூக்கி கலனுக்குள் கொண்டு வர முயற்சிக்காதீர்கள். இத்தகைய பொருட்கள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய கடல் கன்னி வெடிகளாகவோ அல்லது வெடி மருந்துகளாகவோ இருக்கலாம். உடன் கரையில் உள்ள நிலையங்களுக்கு அவை மிதக்கும் இடம் பற்றிய தகவல் தெரிவிக்கவேண்டும்.

4. கரையிலிருந்து மீன்பிடி தளத்துக்குச் செல்லும்போதும், மீன்பிடி தளத்திலிருந்து கரைக்குத் திரும்பும்போதும் மீன்பிடி தளவாடங்களை கலன் தளத்தில் வைத்திருக்கக்கூடாது. அவற்றை பாதுகாப்பு அறையில் வைத்திருக்கவும், பிற நாட்டு அதிகாரிகள் தங்கள் நாட்டு நீர் நிலைகளில் மீன்பிடித்ததாக சந்தேகப்படலாம்.

5. தேவைப்பட்டால் ஒழிய மற்ற கலன்களுக்கு இணையாக செல்ல வேண்டாம்.



# மனதில் நிறுத்தவேண்டிய முக்கிய குறிப்புக்கள்




காற்றழுத்தமானியின் அளவீட்டில் திடீர் வீழ்ச்சியானது வரவிருக்கும் கடுமையான வானிலையை குறிக்கும்.

எப்போதும் கடற்பயணத்துக்கு முன் போதுமான உதிரி பாகங்கள் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும். கிளாண்ட் வழியாக நீர்க்கசிவு ஏற்படாமல் தடுக்க பயன்படும் பொருட்களும், படகு கூடு வழியாக ஏற்படும் நீர்க்கசிவை அடைக்க பயன்படும் பொருட்களும் இருக்கவேண்டும்.



குழு உறுப்பினர்கள் கலனில் உள்ள அனைத்து பாதுகாப்பற்ற நிலைமைகளையும் கலன் முதல்வருக்கு தவறாமல் தெரிவிக்கவேண்டும். அந்த பாதுகாப்பற்ற நிலைமைகளை முடிந்தவரை விரைவாக அவ்வப்போது சரிசெய்வது கலன் முதல்வரது கடமையாகும்.



**ஒரு முதலுதவி பெட்டி குறைந்தபட்சம் பின்வரும் பொருட்களைக் கொண்டிருக்கவேண்டும்**

| அடிப்படை முதலுதவி பெட்டி | அவசியமானது | பரிந்துரைக்கப்படுவது |
|---|---|---|
| கட்டுப்போடும் சீலை | X | |
| பிளாஸ்திரிகள் | X | |
| தொற்று நீக்கிய கட்டுத்துணி | X | |
| காயத்தில் வைக்கப்படும் தொற்று நீக்கிய துணி | X | |
| ஒட்டும் நாடா | X | |
| கத்திரிகோல்கள் | X | |
| பாதுகாப்பான ஊக்குகள் | X | |
| தொற்று நீக்கி களிம்புகள் | X | |
| சுாமனங்கள்/இடுக்கிகள் | | |
| தொற்று நீக்கி திரவம் | | X |
| வலி நிவாரண மாத்திரை | | X |
| சூரியஒளி தடுப்பு பசைகள் | | X |
| கண்களை கழுவ பயன்படும் திரவம் | | X |
| முதலுதவி பற்றிய புத்தகம் | | X |




முதலுதவி என்பது வாழ்க்கைக்கும் இறப்புக்கும் இடையிலான வேறுபாட்டை செய்யமுடியும். உங்கள் முதலுதவி பெட்டி எப்போதும் நன்கு பராமரிக்கப்படுகிறது என்பதையும், அனைத்து உறுப்பினர்களும் முதலுவி நடைமுறைகளையும், மேம்பட்ட அறிவுடனும், முதலுதவியின் புரிதலுடனும் உள்ளனர் என்பதையும் உறுதிபடுத்திக் கொள்ளுங்கள்.

முதல் உதவி பொருட்கள் தீர்ந்து விட்டால் திரும்பவும் நிரப்புங்கள்.

முதலுதவிப் பெட்டி எப்போதும் தண்ணீர் புகாத வகையில் வைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

# முடிவுரைகள்

சிறு தர மீனவர்களுக்கான கடலில் பாதுகாப்பு பற்றிய இந்த கையேடு ஒரு பாதுகாப்பு விழிப்புணர்வு கலாசாரத்துக்கு பங்களிக்கிறது, விபத்தை தடுக்க உதவுகிறது மற்றும் விபத்துக்கள் ஏற்பட்டால் உயிர் பிழைக்கும் சந்தர்ப்பங்களை அதிகரிப்பதாகவும் உவேஅ–ம் மற்றும் வவிகுதி–அஇஅ–ம் நம்புகின்றன.

இந்த கையேடு சிறிய மீன்பிடி கலன்களில் வேலை (எ.கா. தீயிலிருந்து பாதுகாப்பு, தள பாதுகாப்பு, உயிர்காப்பு சாதனங்கள், ஒளியூட்டுதல் மற்றும் காற்றோட்டம்), சுய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பாக கலனை வழிச்செலுத்துதல் ஆகியவை தொடர்புடைய பாதுகாப்பு விடயங்களில் நடைமுறை சார்ந்த எளிமையான வழிகாட்டுதல்கள் அளிக்கிறது. மீன்பிடி கடற்பயணத்தை மேற்கொள்ளும் முன், மீனவர்கள் செய்யவேண்டிய சரிபார்ப்புகளும், நடைமுறைகளும் வழங்கப்படுகின்றன. விபத்துக்கள் நேரும் போது, கடலில் மீனவர்கள் உயிர் பிழைப்பதை அதிகரிக்க ஆலோசனை இந்த கையேட்டில் மேலும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த கையேடு ஒரு சிறுதர மீன்பிடி கலனில் பாதுகாப்பாக வேலை செய்வதற்கான ஆலோசனைகளை வழங்குகிறது.  அதே நேரத்தில் ஒவ்வொரு குழு உறுப்பினர்களும் கடலுக்குச் செல்லும்முன் வருடம் ஒரு முறையாவது ஒரு பாதுகாப்பு பயிற்சியை பெறவேண்டும் என்பதை பரிந்துரைக்கிறது.

இத்தகைய பாதுகாப்பு பயிற்சியில் பின்வருவன இருக்கவேண்டும்:

- ஏற்படக்கூடிய அவசர நிலைகளின் வகைகள், (எ.கா. தீப்பிடித்தல், ஒன்றுடன் ஒன்று மோதுதல், தரைதட்டுதல், மூழ்குதல், காயம்படுதல்) மற்றும் இந்த அவசர நிலைகளை எவ்வாறு சமாளிப்பது.
- உயிர்காப்பு உடைகள், தண்ணீருக்குள் இறங்குவதற்கான ஆடைகள் (பொருத்தமாக) மற்றும்/அல்லது மிதக்க உதவும் சாதனங்கள் முதலியவற்றின் பயன்பாடு.
- தீயணைப்பான்கள் மற்றும் குழாய்களின் பயன்பாடு.
- ஆபத்தில் இருப்பதை தெரிவிக்கும் சமிக்ஞை கருவிகளின் பயன்பாடு.
- படகில் இருக்கும்போது மது, போதை பொருட்களின் நுகர்வினால் ஏற்படும் ஆபத்துக்கள்.
- ஒரு விபத்து ஏற்பட்டால் எடுக்கவேண்டிய முதலுதவி பற்றிய விவரங்கள்.
- பொது கடல்சார் மற்றும் கடற்பயணச் சொற்கள்.
- வெப்பம் குறைவதற்கான (கைப்போதேர்மியா) காரணங்களும் விளைவுகளும், அதற்கான தடுப்பு சிகிச்சைகள்.
- கடலுக்குச் செல்லும் முன் படகு பணியாளர்களின் விவரங்களையும், மீன்பிடி பயண விவரங்களையும் துறைமுக மேலாளருக்கோ அல்லது பணியாளர் சங்கத்துக்கோ தெரிவிப்பதன் முக்கியத்துவம்.
- கலனில் வேலை செய்வது பற்றிய அடிப்படை பாதுகாப்பு விழிப்புணர்வு.

இந்த கையேடு தேசிய சட்டங்கள் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குமுறைகளுக்கு ஒரு மாற்றாக கருதப்படக்கூடாது. தேசிய அளவிலான பாதுகாப்பு பயிற்சி மற்றும் திறன் மேம்பாடுக்கான மாற்றானதும் அல்ல. மீன்பிடி நடவடிக்கைகளை பாதுகாப்பானதாக ஆக்குவதற்கு இந்த கையேட்டில் உள்ள வழிகாட்டுதலையும் ஆலோசனையையும் பயன்படுத்துங்கள்.

‘‘முதலில் பாதுகாப்பு’’ என்பதை ஒரு மீன்பிடி கலனில் வேலைசெய்யும் ஒவ்வொருவரும் மனதில் கொண்டு, ஒரு தினமும் பயன்படுத்தவேண்டும்.

***

சிறுதர மீனவர்களுக்காக கடலில் பாதுகாப்பு பற்றிய இந்த கையேடு மீனவர்கள் மத்தியில் ஒரு பாதுகாப்பு விழிப்புணர்வு கலாசாரத்துக்கும், விபத்துக்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கும், விபத்து ஏற்பட்டால் உயிர் பிழைக்கும் சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்குமான பங்களிப்பை நோக்கமாக கொண்டுள்ளது. இந்த கையேடு சிறுதர மீன்பிடி கலன்களில் வேலை (எ.கா. தீயிலிருந்து பாதுகாப்பு, தள பாதுகாப்பு, உயிர்காப்பு சாதனங்கள், ஒளியூட்டுதல் மற்றும் காற்றோட்டம்), சுய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பாக கலனை வழிச்செலுத்துதல் ஆகியவை தொடர்புடைய பாதுகாப்பு விடயங்களில் நடைமுறை சார்ந்த எளிமையான வழிகாட்டுதல் அளிக்கிறது. மீன்பிடிக்க ஒரு கடற்பயணத்தை மேற்கொள்ளும் முன் செய்யவேண்டிய சரிபார்ப்புகளும், நடைமுறைகளும் அதே போல் கடலில் உயிர் பிழைப்பதற்கான வழிகாட்டுதலும் மேலும் சேர்க்கப்பட்டுள்ளன.

